விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சாவதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalaijaffna@gmail.com
4000/=



# வலம்புரி சங்குநாதம்

சங்கு 24
ஒலி 356 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை (10.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பாடசாலைகளில் இருந்தே இனவாதத்தை ஒழிக்க வேண்டும்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

பாடசாலை மட்டங்களில் இருந்தே இனவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரவித்துள்ளார்.


கொழும்பு கணபதி இந்து மகளிர் கல்லூரிக்கு 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு 02

## மின்சாரம் தடைப்பட்ட பிரதேசங்களில் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் மின்சாரம் தடைப்பட்ட இடங்களில் நேற்று விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

மின்சாரம் தடைப்பட்டுள்ள காலப்பகுதியினுள், பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாடு முழுவதும் விசேட 19



# திடீர் மின்தடையால் நாடு முழுவதும் இருளில் மூழ்கியது

(கொழும்பு)

நாட்டில் நேற்றிரவு ஏற்பட்ட திடீர் மின்தடையால் நாடு முழுவதும் இருளில் மூழ்கியது. நீண்டநேர தொடர் மின்தடையால் பொதுமக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். (19ஆம் பக்கம் பார்க்க)

### கைதடி தெற்கில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி தெற்குப் பகுதியில் உள்ள வீட்டுக் கிணறொன்றில் இருந்து நேற்று சனிக்கிழமை காலை குடும்பஸ்தர் 19

### யாழுக்கான ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் காங்கேசன்துறை இடையிலான ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே திணைக்களம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. 19

## வற் வரி தொடர்பில் சபையில் இன்று விவாதம்

(கொழும்பு)

வற் எனப்படும் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்காக பாராளுமன்றம் இன்று கூடவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.




கடந்த 20ஆம் திகதி பாராளுமன்ற 19

## பௌத்த புராதன சின்னங்கள் வடக்கு - கிழக்கில் அழிப்பு



### சபையில் சரத் வீரசேகர

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் பௌத்த புராதன சின்னங்கள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, வடக்கு, கிழக்கு பிரிந்தால் நிலைமை என்ன வாகும்" என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத் 19

## மின்சாரக் கட்டணம் ஜனவரியில் திருத்தம்

### சபையில் அமைச்சர் கஞ்சன



(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். 19

### வடக்கில் ஜனவரி முதல் இலத்திரனியல் மின் பட்டியல்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் ஜனவரி முதல் இலத்திரனியல் மின்பட்டியல் நடைமுறையாகவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தை முதலாம்திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் அச்சிட்டு விநியோகிக்கப்படும் மின்பட்டியல் நிறுத்தப்படுவதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி அந்நாளில் இருந்து இலத்திரனியல் மின் பட்டியல் அனுப்பி வைக்கப்படும் என்றும் இலங்கை மின்சார சபை மேலும் அறிவித்துள்ளது.

குறித்த இலத்திரனியல் மின் பட்டி 19

### டிசம்பர் 12 ஐ.எம்.எப்புடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

எதிர்வரும் 12ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்துடன் விசேட கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

கலந்துரையாடலின் பின்னர் இரண்டாம் 19

நடுவு நிலை தவறாது நடுநிலை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

திருநெல்வேலியில் இயங்கும் பல்பொருள் வணிக (Supermarket) நிலையமொன்றிற்கு கணனி அறிவுடைய வேலையாட்கள் தேவை. அருகாமையில் இருப்போர் விரும்பத்தக்கது.

(18175)

**077 221 0294**

## காணி விற்பனைக்கு

ராஜ பாதை வீதி , கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.

(18167)

**077 307 5198**
**075 970 1948**

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7855)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## காட்வெயர் கடைக்கு வேலையாட்கள் தேவை

1. மனேஜர்
2. கடைக் கணக்கு எழுதுநர்
3. லேத் மெசின் ஒப்பரேட்டர்

Any retail Shop exp.
Computer knowledge தேவை.

(18174)

Tel : +94750766979
Whatsapp : +94772523155

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : (18155)

**077 882 8638**


## பாடசாலை...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்று கையிலயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனம், மதம் என பிளவுபட்டு நிற்பதை விட அனைத்து இன, மதத்தினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் . அனைவரின் மதம், கலாச்சாரம் மற்றும் இனத்தை மதிக்கும் சர்வ மத, சர்வ இன தேசியம் உருவாக்கப்பட வேண்டும்.

இதற்கு முதுகெலும்பை நேராக வைத்துக் கொண்டு ஒரு நிலைப்பாட்டில் இருந்து கொண்டு பேச வேண்டும் இந்த வங்குரோத்து நிலையிலிருந்து வெளியே வரும் போது இனவாதம், மதவாதம், தீவிர வாதம் போன்றவை விட்டொழிய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

(ம-7)


## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 30 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18154)

**071 173 3911,**
**076 853 5022, 076 213 7239**

## வேலையாட்கள் தேவை

- **வாகன உதவியாளர் (Helper)**
  பொருட்களை கொண்டு சென்று விற்பனை செய்யும் வாகனத்திற்கு உதவியாளர் தேவை.
- **களஞ்சிய காப்பாளர் (Store Keeper)**
  கணனி அறிவுள்ள களஞ்சிய கணக்குகளை சரிபார்க்க ஆட்கள் தேவை. (25 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
- **கணக்காளர்**
  குறைந்தது A/L படித்தவர்கள், கணனி அறிவு உள்ளவர்கள் தேவை.
- **வாகன சாரதி தேவை**
  AD உரிமம் உள்ள வாகன சாரதி தேவை.

* திருநெல்வேலிக்கு அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது (18151)

தொடர்புக்கு : **077 009 0189**


## மரண அறிவித்தல்



தோற்றம் 14 - 09 - 1951

மறைவு 07 - 12 - 2023

### சறோஜா சற்குணசிங்கம்

வீமன்காமம் K.K.S வீதி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி, மாவிட்டபுரம் தெல்லிப்பளை மற்றும் (இல.46, சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை) வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜா சற்குணசிங்கம் அவர்கள் கடந்த 07.12.2023 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற முருகேசு - தங்கம்மா மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பையா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் சற்குணசிங்கம் (பொறியியலாளர் - மின்னியல், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம், ஏழாலை களவாவோடை கருணாகரப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபைத் தலைவர்) அவர்களின் அன்பு மனைவியும் சயந்தன் (லண்டன்), சதீஷன், சதீனா ஆகியோரின் அன்புத் தாயாரும் பகீரதன் (பதிவாளர் நாயகத் திணைக்களம், கச்சேரி யாழ்ப்பாணம்), ஜனார்த்தனி (லண்டன்), சிந்துஜா (ஆசிரியர் - மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜித், சஞ்சித், தங்கேஷ், மதுஷ்சன், கருணி, சுரேன், மேனகா, துர்க்கா, காலஞ்சென்ற மயூரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரி (கனடா), தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பொன்னம்மா மாரிமுத்துவின் பெறாமகளும் செல்லையா, செல்லத்துரையின் பெறாமருமகளும் பிறேமா (சுசீலா - கனடா) அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2023) ஞாயிற்றுக்கிழமை இல.46, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் மாவிட்டபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இல.46, சம்பியன் ஒழுங்கு, 077 715 0356, 077 593
கொக்குவில். 077 990 0041 குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 01 . 1945

இறப்பு 06 . 12 . 2023

### மாணிக்கம் உதயகுமார்

**(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர், றொட்றி முன்னாள் கிராமக் குழுத் தலைவர்)**

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கு அன்னங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் உதயகுமார் அவர்கள் கடந்த 06.12.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் கணபதி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் பாசமிகு கணவரும் சிவகுமார்(சிவன்-கொலண்ட்), மோகனா(ஜேர்மன்), கெங்காதரன்(ஜேர்மன்), கௌரிதரன்(சுவிஸ்), சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இலக்கணகுமார் (ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர்), சுப்பிரமணியம்(தயா), குணசிங்கம்(அப்பன்-கனடா), தேவராணி, காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், பவளம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (10.12.2023) காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்டும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர் (18162)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்-சிங்கள மக்களின் ஒற்றுமையை விரும்பாத சில அரசியல்வாதிகள்

## உலக தமிழர் பேரவையுடனான சந்திப்பில் மகாநாயக்க தேரர்கள்

**(கொழும்பு)**

**வடக்கில் உள்ள தமிழ் மக்களும் கிழக்கில் உள்ள சிங்கள மக்களும் இன-மத பேதமின்றி ஒற்றுமையாக செயற்படுவது, தமது அரசியல் பயணத்துக்கு தடையாக இருக்குமென சிந்திக்கும் சில அரசியல்வாதிகள், மக்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சிப்பதாக மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் திப்படுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.**



இவ்வாறான அரசியல்வாதி களை புறக்கணிக்க வேண்டிய காலம் தற்போது வந்துள்ளதாக உலக தமிழர் பேரவையுடனான சந்திப்பின் போது, அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்த உலக தமிழர் பேரவையினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருந்த நிலையில், நேற்று அமரபுர, அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்துள்ளனர்.

இதன் போது, இலங்கையில் உள்ள தமிழ், சிங்கள மற்றும் முஸ்லீம் மக்கள் இன- மத பேதமின்றி ஒற்றுமையாக வாழ்வதாகவும் இதனை சில அரசியல்வாதிகள் விரும்புவதில்லை எனவும் திப்படுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

இதனை, இலங்கையர்கள் அனைவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் அரசியல் நலனுக்காக வடக்கில் உள்ள சில தமிழ் அரசியல்வாதிகள் மக்களை தவறான பாதையில் வழிநடத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிபபிடத்தக்கது. (நி-5)

## மாற்றுத்திறனாளிகளின் உபகரணங்கள் மீது விதிக்கப்படவுள்ள வற்வரியை நீக்க வேண்டும்

### சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

விசேட தேவையுடையவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கு வற்வரியை அறவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறான எண்ணம் இருக்குமானால் அதனை அரசாங்கம் நீக்கிக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27(2)இன் கீழ் விசேட தேவையுடையவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-5)

## 97 வகையான பொருட்களுக்கு மீளவும் வற்வரி விதிக்க யோசனை

(கொழும்பு)

வற் வரியில் இருந்து இதுவரை விலக்களிக்கப்பட்டிருந்த 138 வகையான பொருட்களில் 97 வகையான பொருட்களுக்கு அதனை விதிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.


பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன சமர்ப்பித்த பிரேரணை மீதான விவாதத்திற்கு நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்பு வேளையில் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"பல வற் விலக்குகள் வழங்கப்படுவதால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 சதவீதத்திற்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இதை பெற வேண்டும். அதனால்தான் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள 138 பொருட்களில் 97 பொருட்களுக்கு வரி விலக்கை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 சதவீத வருமான அதிகரிப்பு அதாவது 378 பில்லியன் ரூபா வருமானம் பெற முடியும் என கணக்கிடப்பட்டுள்ளது. இது நாட்டின் தேவை" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)





உலக தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் யாழிற்கு நேற்று விஜயம் செய்துள்ள நிலையில் மதத்தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

(படங்கள்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விராட்கோலிக்கு பதில் இவரா?






நடைபெறவிருக்கும் 2024 இருபது-20 உலகக்கோப்பை தொடரில், இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கோலிக்கு வாய்ப்பு அளிக்கப்படாது என பி.சி.சி.ஐ திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஒரு நாள் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நிறைவடைந்துள்ள நிலையில் 2024 இருபது-20 உலகக்கோப்பை தொடருக்கான ஆயத்த நிலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் இஷான் கிஷன் 2024 இருபது-20 உலகக்கோப்பை தொடரில் விராட் கோலிக்கு பதில் மூன்றாம் வரிசை துடுப்பாட்ட வீரராக களமிறங்குவார் என வட இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருபது-20 உலகக்கோப்பை குறித்து தென்னாபிரிக்கா தொடருக்கான அணித் தேர்வுக்கு முன்னதாக பி.சி.சி.ஐ உயர் அதிகாரிகள், தேர்வுக் குழு, கப்டன் ரோஹித் சர்மா, பயிற்சியாளர் ராகுல் டிராவிட் ஆகியோர் கலந்துரையாடி முக்கிய முடிவுகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விராட்கோலி ஸ்ட்ரைக் ரேட் குறைவாக இருப்பதால் அவரை அணியில் தேர்வு செய்ய வேண்டாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட் டுள்ளது.

மேலும் அவரிடத்தில் விளையாட இஷான் கிஷானை ஆட வைக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இஷான் கிஷான் இதுவரை கிடைத்த வாய்ப்புக்களை நன்றாக பயன்படுத்தி அணிக்கு தேவையான பங்களிப்பினை செய்துள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மூன்றாம் வரிசை, மிடில் ஆர்டர் என இஷான் கிஷான் துடுப்பெடுத்தாட களமிறங்கிய எல்லா இடங்களிலும் அணிக்கு சிறந்த பங்களிப்பினை செய்துள்ளார்.

அண்மையில் நடந்த அவுஸ்திரேலிய இருபது-20 தொடரில் மூன்றாம் வரிசையில் களமிறங்கி இரண்டு அரைசதம் அடித்துள்ளார். இதற்கு முன்னதாக இருபது-20 உலகக்கோப்பை தொடரில் மூன்றாம் வரிசையில் ஸ்ரேயஸ் ஐயர் களமிறங்குவார் என தகவல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## ஒய்வை அறிவிக்க தயாராகும் அஸ்வின்

இந்திய கிரிக்கெட் அணியின் பிரபல சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து பேசியுள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி தொடங்க உள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் அஸ்வின் இடம்பெற்றுள்ளார்.

காலையில் எழும் போது இன்று பந்து வீச வேண்டுமா துடுப்பாட்டம் செய்ய வேண்டுமா என்ற அலுப்பு ஏற்படுகிறதோ, அப்போதுதான் என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கை முடியும் என்று அர்த்தம்.அது நடந்தால் உடனடியாக நான் கிரிக்கெட்டை விட்டு விலகி விடுவேன்.

என் அடுத்த வாழ்க்கையில் ஒரு பகுதி குறித்து யோசிக்க போகிறேன் என்று அனைவருக்கும் அறிவித்து விடுவேன் என்று அஸ்வின் கூறியுள்ளார். 37 வயதான அஸ்வின் தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டில் மட்டும் கவனம் செலுத்தி வருகிறார். (நி-5)




## கூடைப்பந்தாட்ப் போட்டியில் வெற்றியை தழுவியது சென்.ஜோண்ஸ்




யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந் தாட்ட போட்டியில், 17 வயதிற்கு உட்பட்டோருக்கான போட்டியில் யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது. யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் கூடைப்பந்தாட்ட திடலில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில், கடந்த 10 வருட கால இடைவெளியின் பின்னர் சென் ஜோண்ஸ் கல்லூரி அணியினர் சம்பியனானது.

அதேவேளை 15 வயதிற்கு உட்பட்டோருக்கான போட் டியில், சென் ஜோண்ஸ் கல்லூரி அணி இறுதிப்போட் டிக்கு தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரமற்ற எண்ணெய் விற்பனை செய்தால் கடும் சட்ட நடவடிக்கை - மகிந்த அமரவீர



(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலத்தில் சந்தையில் தரமற்ற தேங்காய் எண்ணெய் விற்பனை செய்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


பாராளுமன்ற அமர்வின் போது விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய ஆலை உரிமையாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் தரமற்ற எண்ணெய் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றது.

எனவே, உற்பத்திகளை தரப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிக்கும் போது இது குறித்து நுகர்வோருக்கு தெரிவிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)


# 7ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர். கிட்டிணன் பொன்னையா

தோற்றம்: 19.01.1937

மறைவு: 26.11.2016

(திதி: கார்த்திகை அபரபக்க திரயோதசி)

ஆண்டு ஏழென்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
இன்றுவரை உங்கள் நினைவுகள் நிழலாடுகின்றன.

உண்மைதானா இதுவென்று-எம்
உள்ளுணர்வு மறுக்கின்றது
அன்பு கொண்ட உம் வதனம்-என்றும்
எம்மோடு இருப்பது போல் உணர்கின்றோம்.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்

கூவில்,
புலோலி தென்மேற்கு,
புலோலி.

(18171)

குடும்பத்தினர்.


# இராசிபலன்

10.12.2023
கார்த்திகை 24, ஞாயிற்றுக்கிழமை,
திருயோதசி முழுவதும்
சுவாதி முற்பகல் 11.21 மணிவரை

சுபநேரம் -9.19-10.49 மணிவரை
இராகுகாலம்-4.49-6.19 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்-
ரேவதி, அச்சுவினி

வளவன்

**மேஷம்** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, ஏடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கடகம்** தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், வாகன சுகமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பயணத்தால் பலன் கிடைக்கும், காரிய வெற்றிக்கு கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்** மதிப்பும் மரியாதையும் உயரும், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், அதிஷ்ட வாய்ப்பக்கள் உங்களை நாடி வரலாம்.

**ரிஷபம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், எளிதில் உணர்ச்சிவசப்படுவதை தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும்.

**சிம்மம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், ஆதாயம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, தொலைபேசித்தகவல்கள் மனக்குழப்பத்தை அகற்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்பீர்கள்.

**மிதுனம்** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வருமானம் பெருக வழியமைப்பீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**தனுசு** பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்** உடல்நலனில் அதிக கவனம் தேவை, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

திருவிளக்கு இல்லாத வீட்டில் பேய் குடி கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை பேர் வந்து போனாலும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது

## கலாநிதி ஆறு.திருமுருகன் ஆதங்கம்



(யாழ்ப்பாணம்)

இந்து சமய மக்களின் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் கிடைக்காத நிலையில் தமிழருக்கு தீர்வு கிடைக்கும் என்பதை நம்ப முடியாத நிலை காணப்படுவதாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் நல்லை ஆதீனத்தின் செயலாளருமான கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

நேற்று உலக தமிழ் பேரவையினர் நல்லை ஆதீன முதல்வரை சந்தித்து கலந்துரையாடிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உங்களைப்போல் பலர் இங்கே வருகை தந்து சந்திப்புகளை மேற்கொள்கின்றார்கள். அவ்வாறே போய்விடுவார்கள். அதனால் எந்த முடிவோ எந்த தீர்வோ எட்டப்படுவதில்லை.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட நீங்கள் இருக்கும் கதிரையில் இருந்து என்னிடம் பல பிரச்சினைகளை கேட்டறிந்தார். நாங்களும் பல விடயங்களை கூறினோம். அவ்வாறே போய் விட்டார். எந்த தீர்வும் கிடைக்கவில்லை குறிப்பாக திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் திருப்பணி வேலைகளை செய்ய முடியாதுள்ளது அங்கே பல இடர்பாடுகள் தொல்பொருள் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதேபோல காங்கேசன் துறை பகுதியை எடுத்துக் கொண்டால் எங்களுடைய சித்தர்கள் இருந்த இடங்கள், சமாதிகளை இடித்து புராதன கோவில்களை இடித்து ஜனாதிபதி மாளிகையினை கட்டி விட்டு இன்று அந்த இடத்தை வேறு யாருக்கோ விற்க முற்படுகிறார்கள்.

முதலில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது தான் எமக்கு ஒரு நம்பிக்கை வரும். அதேபோல இந்த பிரச்சனை தொடர்பில் அஸ்திரிய பீடத்தினர் கூட இங்கே வருகை தந்து ஆதீனத்தை சந்தித்த போது பல விடயங்களை எடுத்துரைத்தோம்.

ஆனால் அவை காற்றில் போய் விட்டது அதேபோல நீங்களும் போக கூடாது நீங்களும் இந்த விடயங்களை கருத்தில் எடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி-5-33)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரத ராஜப் பெருமாள் தேவஸ்தான மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி தின மஹோற்சவமானது எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருதியை திதியும் உத்தராட நட்சத்திரமும் கூடிய நண்பகல் 12.05 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (நி-5-6)

## இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

சங்கீத வித்துவான் ஏ.கே. கருணாகரனின் 1 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இணுவையூர் ரசிக ப்பிரியா சபா கலை வளர்ச்சி மையம் நடத்தும் இசை அரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கத்தில் இடம் பெறும். (நி-5)

## E.T.F அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கொடுப்பனவு

(கொழும்பு)

5 ஆம் வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதியுதவி வழங்குவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வெட்டுப் புள்ளிக்கு மேலாக பெற்றுக்கொண்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் ரூ.15,000/- பெறுமதியான 9,000 புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபையானது தீர்மானித்துள்ளது.

எனவே விண்ணப்பப்படிவங்களை www.etfb.lk என்ற இணையத்தளத்தில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

021 222 0010 (யாழ்ப்பாணம்)

024 222 8225 (வவுனியா) எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் முடிவுத் திகதி 2024.01.12 ஆகும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பதிவுத்தபாலில் -புலமைப் பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை, 'மெஹெவர பியச', 19 ஆம் மாடி, நாராஹேன்பிட்டி, கொழும்பு-5 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (நி-5)

## விபத்தில் அழிவடைந்த சுமைதாங்கி நுணாவிலில் மீள் நிர்மாணம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன் விபத்தில் முற்றாக அழிவடைந்த சுமை தாங்கியை தொல்லியல் திணைக்களம் மீள அதேஇடத்தில் நிர்மாணித்துள்ளது.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் ஏ-9 பிரதான வீதியில் தொல்லியல் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தி பராமரிக்கப்பட்டு வந்த சுமைதாங்கி மீது எரிபொருள் தாங்கி மோதி விபத்துக்குள்ளானதில் பாரம்பரிய சுமைதாங்கி முற்றாக அழிவடைந்திருந்தது.

இந்நிலையில் அச்சுமைதாங்கி தொல்லியல் திணைக்களத்தால் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது. (நி-5-30)



உலக தமிழர் பேரவையின் உறுப்பினர்கள்நேற்று நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்கு சென்று வழிபட்டனர். (படம்- சிவசாந்தன்)

## வாள் தயாரிக்கும் இடங்களை தேடி சுற்றிவளைப்புகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாள், நீளமான கத்தி தயாரிக்கும் இடங்களைத் தேடி விசேட சுற்றிவளைப்புகளை தீவிரப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்ற வாள்வெட்டு சம்பவங்களை கட்டுப்படுத்தும் நோக்கில், இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருவதாக, யாழ். பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக யாழ். குடாநாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதால், சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளதாக, யாழ். பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, யாழ். மாவட்டத்தில் கூலிக்காக குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தொடர்பில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார். அவ்வாறு கூலிக்காக குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் செயற்பாட்டை தாம் தொடர்ச்சியாக முன்னெடுப்பதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார். (நி-5-33)

## வங்கி அட்டையை திருடிய நபர் பொருட்கொள்வனவின் போது கைது

(கரணவாய்)

வீடு ஒன்றினுள் அத்துமீறி நுழைந்து வங்கி அட்டையை திருடி பல்பொருள் அங்காடியில் பொருட்களை கொள்வனவு செய்த சந்தேகநபர் ஒருவர் நேற்று சனிக்கிழமை நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மேற்படி வீட்டுக்குள் புகுந்து வங்கி அட்டையை திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த நெல்லியடிப் பொலிஸார், நெல்லியடியில் உள்ள பல்பொருள் அங்காடியில் மேற்படி வங்கி அட்டையைப் பயன்படுத்தி பொருட்கள் கொள்வனவு செய்தமை தெரியவந்தது.

இதனை அடுத்து பொருட்களை கொள்வனவு செய்த கொடிகாமத்தை சேர்ந்த 33 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 418
Viber 076 636 3378



# தேர்தலை எதிர்கொள்ளும் திட்டமேதும் உண்டா?

திட்டமிடல் ஏதும் இன்றி இன்று பெய்த மழை வெள்ளத்திற்கு அன்றே வரும் தவளைகள் போல தேர்தல் அறிவித்த அடுத்த கணமே வந்திறங்கும் தமிழ்க்கட்சிகள் கொள்கையின்றி தேர்தலில் குதிப்பது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

**2024** தேர்தல் ஆண்டாக மலரப்போகிறது என்பது முடிவாகி விட்டது.

தற்போது நடந்து கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி கயிற்றில் நடக்கும் செயலுக்கு ஒப்பானது என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும்.

ஆயினும் நாடு இக்கட்டான சூழ் நிலையில் சிக்கித்தவித்த போது நாட்டை பொறுப்பேற்று ஓரளவு சுமுகமான நிலைக்குக் கொண்டு வந்தவர் ரணில் விக்கிரமசிங்க என்ற நற்பெயரின் பலன் அவரின் ஆட்சி தொடர்கிறது என்பது தெளிவு.

நாடு தற்போது இருக்கும் நிலையில் ஒரு தேர்தலை எதிர்கொள்ளத்தயார் இல்லை என்பது பொருளாதார ரீதியிலான பிரச்சினையாக மட்டுமே பார்க்கப்படுகிறது.

ஆயினும் நாட்டு மக்கள் தேர்தல் ஒன்றைச் சந்திக்க மிக ஆவலுடனேயே இருக்கின்றனர்.

அது அவர்களின் ஜனநாயக ரீதியான உரிமையும் கூட. நாட்டில் காலத்துக்குக் காலம் தேர்தல்கள் நடைபெறவேண்டும்.

மக்கள் ஜனநாயக ரீதியாக தமது வாக்குகளை அளித்து தமக்குப் பொருத்தமானவரை தெரிவுசெய்வர்.

இதில் சில பல மாற்றங்களும் நடைபெற வாய்ப்புகள் இருக்கிறது.

அதாவது கடந்த தேர்தலில் ஒருவரினால் ஏற்கப்பட்டு வாக்களிக்கப்பட்டவர் அடுத்த முறை நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்கள் அதிகம்.

அதேபோல நிராகரிக்கப்பட்டவர் ஏற்கப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்படும்.

இது தனிமனித ஜனநாயகம். இதை யாரும் தட்டிப்பறித்துவிடமுடியாது.

தற்போது நாட்டில் எந்தத் தேர்தல் முதலில் நடைபெற வேண்டும் என்பதில் குழப்பங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றத்தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என சிலர் குரல் கொடுக்கின்றனர்.

இல்லை மாகாணசபைத் தேர்தல்களையே நடத்த வேண்டும் என இன்னும் சிலர் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலையே எதிர் நோக்கக் காத்திருப்பார் என்பது அவரின் நடவடிக்கைகளில் புலப்படுகின்றது.

பாராளுமன்றில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சாராதவர்கள் என்பதை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நன்கறிவர்.

தற்போதைய பாராளுமன்றில் ஜனாதிபதியைத் தவிர ஐ.தே.காவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் இல்லை.

இந்த நேரத்தில் ஜனாதிபதி பாராளுமன்றைக் கலைக்கும் வாய்ப்புக்களும் அதிகமுண்டு.

பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள ஐ.தே.கவைப் பலப்படுத்தும் தேவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு.

அதை ஓரளவு அவர் செயற்படுத்தியிருக்கிறார் என்பதும் தற்போதைய ஐ.தே.காவின் செயற்பாடுகளினூடே புலப்படுகிறது.

கட்சிகளின் பலத்தை அறிவதற்கான நாடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் விளங்குகின்றன.

இவ்வேளையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்தும் திட்டத்தை ஜனாதிபதி கையில் எடுக்க மாட்டார்.

இந்த நிலைதான் மாகாண சபைத் தேர்தல்களும் எனலாம். அதனால் அதுவும் நடப்பதற்கு சாத்தியங்கள் குறைவு.

இந்நேரத்தில் ஜனாதிபதித்தேர்தல், பாராளுமன்றத் தேர்தலை 2024இல் நடத்த ஜனாதிபதி விருப்பம் கொண்டுள்ளமை நாட்டு மக்களுக்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது.




2024 இல் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பாராளுமன்றத் தேர்தல் நடைபெறப் போகிறது.

அதற்கான தமிழ் தரப்புகளின் நடவடிக்கை என்ன என்பது இன்றுவரை குழப்பகரமாகவே காணப்படுகிறது.

திட்டமிடல் ஏதும் இன்றி இன்று பெய்த மழை வெள்ளத்திற்கு அன்றே வரும் தவளைகள் போல தேர்தல் அறிவித்த அடுத்த கணமே வந்திறங்கும் தமிழ்க்கட்சிகள் கொள் கையின்றி தேர்தலில் குதிப்பது எந்தவகையிலும் ஏற்புடையதானவிடயம் அல்ல.

தவிர, தமிழ்த்தேசியக் கட்சிகளிடையே காணப்படும் பிழவுகள் அரச கட்சி சார்ந்தவர்களுக்கு சாதகமானதாக அமைந்துவிடும்.

இவற்றை மனதில் வைத்துச் செயற்பட வேண்டியவர்கள் இதுவிடயத்தில் கவனம் செலுத்தாமல் இருப்பது கண்ணை திறந்து கொண்டு கிணற்றுக்குள் வீழ்வதற்குச் சமமானது.

எமது பலம் எது? பலவீனம் எது என்பது எமக்குத் தெரிந்த விடயம். ஆயினும் அதைப் பலப்படுத்த தவறும் எம்மையும் எமது தலைமைகளையும் என்னவென்று கூறிவிடமுடியும்.

ஆக, ஜனாதிபதித் தேர்தல் எனின் சிங்கள தலைவர் ஒருவரை ஆதரிப்பதும் பாராளுமன்றத் தேர்தல் எனின் சிங்களத் தலைவர்களை எதிர்ப்பதுமான அரசியலிலேயே நாம் மூழ்கிக் கிடக்கின்றோம்.

இது பொரும்பாண்மை சிங்கள ஆட்சியாளர்களுக்கு நன்மைபகிர்க்கும் செயலாகவே உள்ளது.

இலங்கை வரலாற்றில் தமிழ்மக்கள் ஒன்றிணைந்து ஆதரவளித்த ஜனாதிபதி வேட்பாளர் எவரும் வென்றதாய் சரித்திரம் இல்லை.

இதற்கு தமிழர் தரப்பு ஆதரித்தால் அவரை விடுதலைப் புலிகள் ஆதரவாளர் என்றும் தமிழீழத்தை தமிழர்களுக்கு வழங்கப் போகிறார் என்றும் எதிர் கட்சிகள் எதிர்ப்பிரச்சாரம் செய்து, அவரை தோற்கடித்து விடுவது வரலாறு ஆகிவிட்டது.

இங்கு நாம் ஒன்றிணைந்து தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழர் பலம் முழுவதையும் அந்தப் பொது வேட்பாளர் மீது குவிப்போமாக இருந்தால் தமிழர்களின் ஒற்றுமையினையும் எமக்கான அங்கீகாரத்தை இலங்கை ஆட்சியாளர் வழங்க வில்லை என்ற செய்தியையும் சர்வ தேசத்திற்கு பறைசாற்றலாம்.

ஆனால் அதை நாம் ஒருபோதும் செய்யப் போவதில்லை.

தேர்தல் காலங்களில் தேசியம் பேசி மக்களை உசுப்பேற்றி ஓட்டு வாங்குவதுடன் தமிழ் அரசியல் வாதிகளின் வேலை முடிந்து விடுகிறது என்பதான கதையே தொடர்ந்து செல்கிறது.

தற்போது கூட பழம்பெரும் கட்சியான இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் பாரிய உட்கட்சிப் பூசல்கள் எழுந்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

அதாகப்பட்டது, கட்சித் தலைமையை தெரிவதில் ஏற்பட்ட இழுபறி பொது வாக்கெடுப்பு நடத்த தீர்மானிக்கும் அளவில் வந்து நிற்கிறது.

ஒரு காலத்தில் ஒற்றுமைக்குப் பேர்போன தமிழர்களின் பழம் பெரும் கட்சியின் நிலை இவ்வாறு இருக்கின்றது எனின் யாரிடம் போய் முறையிட முடியும்.

எது எவ்வாறாயினும் 2024 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் தேர்தலை தமிழர்கள் ஒன்றிணைந்து எதிர்கொள்ளும் தேர்தலாய் உருவாக்க கட்சிபேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற முனைவோமாக.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் சாத்திரியார் சதாசிவத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற செ.யோகராசா அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

அவரின் மறைவு தமிழ்த் துறைக்குப் பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** தொண்டைமானாறு வெளிக்கள நிலையப் பரீட்சைகளை வடக்கு மாகாணத்துப் பாடசாலைகளில இடையறாது நடத்த வேண்டுமெனக் கடந்த முறைக்கு முந்தின தடவை ஆலடியில கதைத்தோம்.

அதனைப் பலரும் ஏற்றுக் கொண்டினம். அதேநேரம் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தில சில குறைபாடுகள் இருப்பதாகவும் அவற்றைச் சீராக்கம் செய்ய வேணும் எண்டும் சிலர் தங்கட கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

**வாத்தியார்:-** விதானையார் அவயள் சொன்ன விடயங்களை ஆலடியில முன் வையுங்களன்.


**விதானையார்:-** தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால தயாரிக்கப்படுகின்ற வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்பாக ஏதோவொரு வகையில் வெளியாகிவிடுகுது. அதிலும் குறிப்பாக சில தனியார் கல்வி நிறுவனங்கள் அந்த வினாத் தாள்களைத் தங்கட மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கினம். எனவே தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் இது தொடர்பில கவனம் செலுத்த வேணும்.

அதோட, பரீட்சை வினாத்தாளுக்கு அறவிடுகின்ற கட்டணம் அதிகமாக இருப்பதாகவும் சொல்லப்படுகுது. வினாத்தாள் திருத்துகின்ற ஆசிரியர்களுக்கு எந்த விதமான கொடுப்பனவுகளையும் வழங்காத போது, பரீட்சைக் கட்டணத்தைக் குறைப்புச் செய்தால் அது எங்கட மாணவர்களுக்கும் உதவியாக இருக்கும்.

அத்தோடு பரீட்சை நடத்துகின்ற நேர அட்டவணை தொடர்பில வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் கலந்துரையாடி நேர அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களும் முன் வைக்கப்பட்டுள்ளன.

எனவே இது தொடர்பில தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் உரிய ஆய்வுகளைச் செய்ய வேண்டுமென விதானையார் கூற, அத்தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானம் நிறைவேற, அந்நேரம் பார்த்து சாத்திரியார் சதாசிவம் காலை நொண்டிய படி ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.



**தண்ணிப் பைப் தாட்ட இடங்களில் தடக்கி விழும் பரிதாபம் காண்மினே!**

**மூப்பர்:-** என்ன சாத்திரியார் காலை நொண்டுறியள் என்ன சங்கதி.

**சாத்திரியார்:-** அதை யேன் கேக்கிறியள். யாழ்ப்பாணம் கந்தர்மடம் இந்து மகளிர் ஒழுங்கை, குமாரசாமி வீதி ஆகிய இடங்களில தண்ணீர் பைப் தாட்டவியள்.

தண்ணீர்ப் பைப்புக்காக வீதிக்குக் குறுக்காக வெட்டிய இடங்களில சரியான திருத்தம் செய்யாததால, அந்த இடங்கள் குன்றும் குழியுமாக இருக்குது. அதில நான் விழுந்து போனன். இப்ப நடக்கிறது கஷ்டமாக இருக்குது.

**கங்காணியார்:-** நானும் கேள்விப்பட்டனான். சாத்திரியார் சொன்ன இடங்களிலும் பலாலி வீதியில இருந்து பிரிகிற ஒழுங்கைகளிலும் பைப் தாக்கிறதுக்காக வெட்டப்பட்ட இடங்கள் சரியான முறையில மூடப்படாததால மழை வெள்ளம் மண்ணை அரித்துச் செல்ல, அந்த இடங்கள் பள்ளமாய்ப் போயிற்று.

அதன் காரணமாக ஒழுங்காக வாகனங்களை வீதிக்கு ஏற்ற முடியாமல் இருப்பதாக அப் பகுதி மக்கள் பலரும் குறைபடுகினம்.

**சிறாப்பர்:-** அப்ப இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்கிறதில்லையோ.

**வாத்தியார்:-** அப்ப, சாத்திரியார் சொன்ன இடங்கள் உடனடியாகச் செம்மைப்படுத்த வேணும் என்றொரு தீர்மானத்தை நிறைவேற்றுவோம் என வாத்தியார் கூற, குறித்த தீர்மானம் ஆலடியில் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் நிசப்தம் நிலவ, அதனைச் சாத்திரியார் சதாசிவம் ஊடறுத்துக் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி, இலங்கை தமிழரசுக் கட்சியின்ர தலைவர் பதவிக்கு போட்டி நடக்கப் போவதாகக் கேள்விப்பட்டன். எப்படி இருக்குது நிலைமை.

**விதானையார்:-** நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் தமிழரசுக் கட்சியில தலைமைப் பதவிக்குப் போட்டி நடக்குது. ஆனால் ஒரு வித்தியாசம். முன்பெல்லாம் பொது மக்கள் கட்சியின்ர விசுவாசிகளாக இருந்தினம். ஆனால் இப்ப ஆட்களுக்குத் தான் விசுவாசமாக இருக்கினம். அதனால தான் தமிழரசுக் கட்சியில தலைமைப் பதவிக்குப் போட்டி நடக்கப் போகுதெண்ட உடனேயே சிலர் தங்கட முகநூலில, தாம் தாம் சார்ந்தவர்களுக்கு ஆதரவாகக் கருத்துரைக்கத் தொடங்கியிருக்கினம். இன்னும் சிலர் எதிராகவும் கருத்துக்களைப் பகிர்வு செய்யினம்.

என்ன செய்யிறது. கட்சி நிண்டு நிலைக்க வேணும் எண்ட சிந்தனை இல்லாமல் போய், இப்ப தன்ர ஆள் பதவிக்கு வர வேணும் எண்ட நிலைமை வந்திட்டுது.

என்னவாக இருந்தாலும் கட்சி என்ற நோக்கில சிந்திக்கிறது தான் நல்லது.

**வாத்தியார்:-** அப்ப தலைமைப் பதவிக்குரிய தேர்தல் முடிந்து தலைவர் தெரிவான பிறகு கட்சிக்குள்ள ஒற்றுமை வலுப்பெறுமோ.

**பண்டிதர்:-** காலப் பிழைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இல்லாமல் போயிட்டுது. கூட்டமைப்பு இருந்தாலாவது இரண்டு பேருக்கும் இரண்டு தலைமை எண்டு கொடுக்கலாம். என்ன செய்யிறது கூட்டமைப்பையும் துண்டாடியாச்சே.

**மூப்பர்:-** சரி.. சரி... எதுக்கும் பொறுத்திருந்து பார்ப்பம். இவ்வாறு மூப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் காண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளத்தில் சிக்கிய சென்னை மக்களையே காப்பாற்ற முடியாத இந்தியாவால் ஈழத் தமிழரை எப்படிக் காப்பாற்ற முடியும்?

**கணேஸ் — பருத்தித்துறை**

**வடகொரியா மீது போர் தொடுப்பதை எவராலும் தடுக்க முடியாது என்கிறாரே அமெரிக்க ஜனாதிபதி?**

அப்படியென்றால் மூன்றாம் உலக மகா யுத்தம் தோன்றுவதை எவராலும் தடுக்க முடியாது.

புலி வருகிறது, புலி வருகிறது என ஓர் இடையன் மற்றவர்களை ஏமாற்றி கடைசியில் புலி வந்த போது அவனின் கூக்குரலுக்கு எவரும் வரவில்லை.

இடையன் புலி அடித்து இறந்து போனான்.

இடையனின் நிலை அமெரிக்காவுக்கு வராமல் இருந்தால் சரி.

**பிரபு — அத்தியடி**

**தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி யாருக்கு வியாசரே?**

ஏற்கனவே பலமிழந்திருக்கும் தமிழரசுக் கட்சிக்குள் தலைமைப்பதவிக்கு தேர்தல் என்றதும் மனம் பதைபதைத்தது.

தன்னைத் தலைவன் என்று தானே கூறாமல் மக்களே அவனைத் தலைவன் என்று போற்றிய இனத்தின் வழிவந்த தமிழினத்துக் கட்சிக்குள் தலைமைக்குப் போட்டி.

சபாஸ் சரியான போட்டி.

குரங்கு அப்பம் பகிர்ந்த கதையாக கடைசியில் மாவை ஐயாவின் கையில் போய்த்தான் நிற்கப்போகிறது தலைமை.

**யாரோ — வடக்குமாகாணம்**

**பயங்கரவாதம் என்பது யாருக்குப் பொருத்தமானது வியாசரே?**

பயங்கரவாதம் என்பது ஒரு கொள்கை இன்றிய அமைப்பு. தன் இனத்தையும் பிற இனத்தையும் இரக்கமின்றி அழிக்கும்.

இலங்கையில் இறுதி யுத்தத்தில் தமிழினத்துக்கு நடந்த கொடுமை உங்களுக்குத் தெரியுமல்லவா?

தன் நாட்டு மக்களை எவ்வித ஈவிரக்கமுமின்றி கொன்று குவித்தவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும் தானே?

இப்போது முடிவெடுங்கள் உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**டனுசாந் ராசா — திருநெல்வேலி**

**நடந்து முடிந்த மாவீரர் தின நிகழ்வில் போராளிகளின் உடை அணிந்த விடயத்தின் நோக்கம் என்ன வியாசரே?**

இறைச்சி சாப்பிடுகிறோம் என்பதற்காக எலும்பைக் கழுத்தில் கொழுவக்கூடாது என்றொரு பழமொழி உண்டல்லவா?

அதைத்தான் இவ்விடத்தில் கூறிவிட முடியும்.


மாவீரர்கள் எம் இனத்தின் விடிவுக்காக தம்முயிரை அர்ப்பணித்தவர்கள். அவர்களை நினைவு கூரத்தான் வேண்டும். அது எமது கடமை.

அதற்காக இதெல்லாம் ஓவர்.

**மதுவன் — மீசாலை**

**தமிழ் எம்.பிக்களை தப்பவிட மாட்டாராமே சரத் வீரசேகர?**

இத்துடன் விளையாட்டுச் செய்திகள் முடிவடைந்தன.



தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி யாருக்கு வியாசரே?

**கௌசிகன் — துணைவி**

**எதிர்காலத்தைப்பற்றி கற்பனை செய்யலாமா வியாசரே?**

செய்யலாம். ஆனால் அந்தக் கற்பனைக்கு ஒரு நியாயம் வேண்டும். எல்லை உண்டு.

அந்த எல்லையை மீறினால் அந்தக் கற்பனைக்கோட்டை இடிந்துவிடும்.

ஆதலால் கற்பனைக் கோட்டை கட்டுவதைவிட எதிர்காலத்தைப் பற்றி கனவு காணலாம்.

அந்தக் கனவை மெய்ப்பிக்க எம்மை நாமே புடம்போட்டுக் கொள்ள வேண்டும்.

இதையே அப்துல்கலாம் கூறியிருக்கிறார்.

**சுரேசன் — பத்தமேனி**

**மரணச் சடங்குகளில் வைக்கப்படும் பனர்கள் மீள் சுழற்சிக்கு செல்லாமல் சூழலைப் பாதிக்கிறதே?**

தமிழ் கலாசாரத்தில் இப்போது புதிதாக புகுந்திருக்கிறது இந்த பனர் கலாசாரம்.

என்ன கொடுமை என்றே தெரியவில்லை. மரணவீடு நடந்தால் ஆளாளுக்கு பனர் அடித்து அமர்க்களப்படுத்திவிடுகிறார்கள்.

இது விசும்புக் கௌரவத்துக்காகவே அதிகம் நடக்கிறதாம்.

எங்கள் குடும்ப உறுப்பினருக்கு நாங்களே கண்ணீர் அஞ்சலி பனர் வைக்கும் கொடுமையை எங்கு போய்க் கூறிவிட முடியும்.

**சுதன் — குப்பிழான்**

**வெள்ளத்தில் சிக்கிய சென்னை மக்களையே காப்பாற்ற முடியாத இந்தியாவால் ஈழத் தமிழரை எப்படிக் காப்பாற்ற முடியும்?**

சீனாவின் சீண்டல் உள்ளவரை ஈழத்தமிழரைக் காப்பாற்றுவேன் என்று சொல்லிக்கொண்டுதான் இருக்கும் இந்தியா.

ஆனால் அதில் எந்த முன்னேற்றமும் இருக்காது.

அவர்களுக்கு இராஜதந்திரம் தான் பிடிக்கும் போல.

என்ன செய்வது எம்மிடம் தான் இராசசியமும் இல்லை. இராஜதந்திரமும் இல்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: வல்லவனுக்கு வல்லவன்
இசை: வேதா
பாடல்: கவியரசு கண்ணதாசன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்



இந்த மானிடக் காதலெல்லாம்
ஒரு மரணத்தில் மாறி விடும்
அந்த மலர்களின் வாசமெல்லாம்
ஒரு மாலைக்குள் வாடி விடும்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

நூறுமுறை பிறந்தாலும்
நூறுமுறை இறந்தாலும்
உனைப் பிரிந்து வெகுதூரம் – நான்
ஒருநாளும் போவதில்லை
உலகத்தின் கண்களிலே
உருவங்கள் மறைந்தாலும்
ஒன்றான உள்ளங்கள்
ஒருநாளும் மறைவதில்லை!

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

இந்த மானிடக் காதலெல்லாம்
ஒரு மரணத்தில் மாறி விடும்
அந்த மலர்களின் வாசமெல்லாம்
ஒரு மாலைக்குள் வாடி விடும்
நம் காதலின் தீபம் மட்டும்
எந்த நாளிலும் கூட வரும்

(ஓராயிரம் பார்வையிலே)

இந்த காற்றினில் நான் கலந்தேன்
உன் கண்களை தழுவுகின்றேன்
இந்த ஆற்றினில் ஓடுகின்றேன்
உன் ஆடையில் ஆடுகின்றேன்
நான் போகின்ற பாதையெல்லாம்
உன் பூமுகம் காணுகின்றேன்

(ஓராயிரம் பார்வையிலே)

# 'துவாரகா பிரபாகரன்'?

நவம்பர் 27 மாவீரர் நாள் அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா உரையாற்றுவார் என்ற செய்திகள் வெளியாகிய நிலையில் அன்றைய தினம் அவரின் உரை காணொலி வடிவில் வெளியாகியிருந்தது.

அவர் துவாரகாதான் என்றுஒரு தரப்பினரும் இல்லை என்று மற்றொரு தரப்பினரும் மல்லுக்கட்டி வரும் நிலையில் அக்காணொலி தொடர்பில் ஜூனியர் விகடன் இதழில் வெளியாகிய தமிழக தலைவர்களின் கருத்து இங்கு பிரசுரமாகிறது.

(ஆ-ர்)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், அவருடைய மனைவி மதிவதனி, மகள் துவாரகா மற்றும் மகன் பாலச்சந்திரன் 2009 ஆம் ஆண்டு போரின்போது கொல்லப்பட்டார்கள் என்று இலங்கை இராணுவம் அறிவித்தது. ஆனால், "அவர்கள் அனைவருமே உயிருடன்தான் உள்ளனர். ஒரு நாள் வெளியுலகுக்கு வருவார்கள்" என்று விடுதலை புலிகள் ஆதரவு தரப்பினர் சொல்லி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த நவம்பர் 27 மாவீரர் தினம் அன்று, துவாரகா பிரபாகரன் காணொலி வாயிலாகத் தோன்றி பேசுவார் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படியே, துவாரகா என்கிற பெயருடன் ஒரு பெண் இணையத்தள காணொலியில் தோன்றி, "தமிழீழ விடுதலையை வென்றெடுக்க, எனது அரசியல் பயணம் தொடரும்" எனப் பேசினார். இது, தமிழீழ ஆதரவாளர்களிடையே பெரும் விவாதங்களையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

## இது, பா.ஜ.க-வின் திட்டம்!
**வன்னியரசு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி**

"இலங்கையில் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்ட நேரத்தில், பிரபாகரன் இருக்கிறார் என்ற பேச்சு மீண்டும் எழத் தொடங்கியது. இது சிங்கள மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க ராஜபக்ஷக்களின் திட்டமாகக்கூட இருக்கலாம். மறுபுறம் ஈழத்தமிழர்களைச் சந்திக்க பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை, மத்திய அமைச்சர்கள் எல்.முருகன், நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் இலங்கைக்குச் செல்கிறார்கள். அங்கிருக்கும் மலையகத் தமிழர்களுக்கு 10,000 வீடுகள் வழங்குவதாக மத்திய பா.ஜ.க அரசு அறிவிக்கிறது. இதையெல்லாம் இணைத்துப் பார்க்கும் போது தமிழ் உணர்வாளர்களின் ஆதரவைப் பெற இதன் பின்னணியில் பா.ஜ.க திட்டமிட்டு இயங்குகிறதோ என்ற சந்தேகமும் வலுக்கிறது.

## புலிகளின் அரசியல் இன்னும் தொடர்கிறது!
**அய்யநாதன், அரசியல் ஆய்வாளர்**

"துவாரகா பிரபாகரன் பேசிய அரசியல் செய்தி மிக முக்கியமானது. அது துவாரகாவே இல்லை என்பது சிறுபிள்ளைத்தனமான அணுகுமுறை. விடுதலைப் புலிகளின் அரசியல் இன்னும் தொடர்கிறது என் பதைச் சில அரசியல் கட்சிகள் ஏற்க மறுக்கின்றன. குறிப்பாக, புலம்பெயர் தமிழர் அமைப்புகள் பிரிந்து நிற்கின்றன. அவற்றை ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

அதன் அடுத்த கட்டமாக துவாரகா பிரபாகரனின் அரசியல் வருகையைக் கருதலாம். ஆனால், உலக நாடுகளின் நிலைப்பாடுகள் எப்படி அமையப் போகின்றன என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்."



## "என்னிடம் ஆதாரம் எதுவுமில்லை!"
**இயக்குநர் கௌதமன், தமிழ்ப் பேரரசுக்கட்சி**

"இது துவாரகா இல்லை எனப் பலர் விமர்சிக்கிறார்கள். நான் அறிவிக்கும்போதும், துவாரகா உரையாற்றிய பிறகு பேசும்போதும் ஒரு விடயத்தைச் சொன்னேன். இது புலி பெற்ற பிள்ளையாக இருந்தால் போற்றுங்கள். அது போலியாக இருந்தால் புறந்தள்ளுங் கள்" என்றேன். என்னைப் பொறுத்த வரை துவாரகாவின் குரலும், காணொலிக் குரலும் ஒன்றாக இருந்தன. அந்த முகம்தான் துவாரகாவின் முகம். அவர்தான் பிரபாகரனின் மகள் என மல்லுக்கட்டுவதல்ல என் வேலை. அதை உரியவர்கள் ஆய்வு செய்து கொள்ளட்டும். துவாரகா அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது வெளியுலகத்துக்குத் தெரியத்தான் போகிறது. ஆனால், அவர்தான் துவாரகா எனச் சொல்ல என்னிடம் ஆதாரம் எதுவுமில்லை."

## பா.ஜ.க கையிலெடுக்கும் அஸ்திரம்!
**கோவை ராமகிருட்டிணன், தந்தை பெரியார் திராவிடர் கழகம்**

"புலம்பெயர்ந்த தமிழர்களே இந்தக் காணொலியை நம்பத் தயாராக இல்லை. பிரபாகரனும் உயிருடன் இருக்கிறார் என்றால் அவரே தோன்றி, அவரின் நம்பிக்கைக்குரிய அரசியல் தலைவர்களை அணுகியிருப்பாரே? இலங்கையில் பா.ஜ.க தனது அரசியலை நிறுவிட இதுபோன்ற அஸ்திரங்களைக் கையிலெடுத்திருக்கிறதா என்ற கேள்வியும், இது இந்திய உளவு அமைப்புகளின் வேலையாக இருக்குமோ என்ற சந்தேகமும் எழுகின்றன."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். தர்சனின் "நாடு" எப்படி இருக்கிறது?



சகல வசதிகளுடன் வாழும் மக்களுக்கு மத்தியில், அடிப்படை வசதிகளும் உரிமைகளும்கூட மறுக்கப்படும் மக்களும் வாழ்கிறார்கள் என்பதை எடுத்துரைக்கும் படம் 'நாடு.'

கொல்லிமலையின் தேனாடு கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, பல உயிரிழப்புகளுக்கும் போராட்டங்களுக்கும் பிறகு மருத்துவராகப் பணியமர்த்தப்படுகிறார் மகிமா நம்பியார். அங்கு வசதிகள் இல்லாததால் மாறுதல் பெற்றுப் போக விரும்புகிறார். அவருக்கு வேண்டியதைச் செய்து, அங்கேயே தக்கவைக்க கிராம மக்கள் போராடுகிறார்கள். இறுதியில் அவர் அங்கேயே தங்கிப் பணியாற்றச் சம்மதித்தாரா என்பதுதான் கதை.

வெள்ளந்தித்தனம், குடும்பம் மற்றும் கிராமத்தின் மீதான பாசம் என ஒரு கிராமத்து இளைஞரை நம் கண்முன் கொண்டு வருகிறார் தர்ஷன். சத்தமில்லாமல் உடைந்தழும் அந்த ஒற்றைக் காட்சியில் தன் பெயரைப் பதிய வைக்கிறார்.

மிடுக்காக அறிமுகமாகி, கிராமத்தினரின் அன்பால் இளகுவாகும் மருத்துவராக மகிமா நம்பியார் குறைவில்லாத நடிப்பை வழங்குகிறார். மறைந்த நடிகர் ஆர்.எஸ்.சிவாஜியின் அனுபவ நடிப்பு உணர்வுபூர்வமான காட்சியில் உரமாகியிருக்கிறது. பொறுப்பும் பொதுநலமும் கொண்டவராக சிங்கம் புலி சிறப்பான நடிப்பை வழங்கியிருக்கிறார். இன்பா ரவிக்குமாரின் ஒன்லைன் காமெடிகள் பட்டாசு.

மலைகிராமத்தினரின் வெகுளித்தனம், மருத்துவரை அங்கேயே இருக்க வைக்க அவர்கள் செய்யும் சேட்டைகள் என சுவாரஸ்யமாகத் தொடங்கும் படம் நீட் தேர்வு, மலைவாசிகளின் பிரச்சினைகளும் போராட்டங்களும், குழந்தைத் திருமண எதிர்ப்பு, மருத்துவ மாணவர்களுக்கு அரசு செய்யும் செலவு என அரசியல் ரீதியாகவும் முக்கியமான விடயங்களை அழகாகத் தொட்டுச் சொல்கிறது.

மருத்துவப் படிப்பிற்கு மதிப்பெண் மட்டும் போதாது, சமூக மற்றும் பொருளாதார நிலையும் கருத்தில் கொள்ளப்படவேண்டும் என 'சமூக அநீதி'யைச் சுட்டிக்காட்டிய இயக்குநர் எம்.சரவணனுக்குப் பாராட்டுகள்.

**உரிமைகள் மறுக்கப்படும் மக்களின் குரலாக ஒலிக்கிறது 'நாடு'**

# வெற்றியின் இரகசியங்கள்

சில நேரங்களில் நம் வாழ்க்கை ஒரே இடத்தில் தங்கி விட்டது போல் நாம் உணர்கிறோம். அடுத்த கட்டத்திற்கு எப்படி நகர்த்தி செல்வது என்பதே தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

நம்மிடம் இருக்கும் ஒரு சில பழக்கங்கள் நம்மை வளர விடுவதில்லை, அவற்றை கண்டறிந்து களைவோம் வாருங்கள்,

## 1. மாற்றத்தை விரும்புவதில்லை:

தொடர்ந்து குழப்பத்தில் இருப்பவர்கள் மாற்றத்தை கண்டு அஞ்சுகின்றனர். அவர்கள் மாற்றத்தை வளர்ச்சிக்கான ஒரு வாய்ப்பாக பார்க்காமல், நம் வழக்கத்தை விட்டு வெளியே சென்று இதை செய்ய வேண்டுமே என்று அச்சம் கொள்கின்றனர்.

இந்த பயம் நம் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துகிறது. வெற்றி பெற முடியாத நபர்கள் தங்களுக்கு தெரிந்தவை பயனளிக்கவில்லை என்றாலும் அதையே தொடர்ந்து செய்கின்றனர். புதிதாக எதையும் கற்று கற்றுக்கொள்ள விரும்புவதில்லை.

மாற்றத்தை விரும்பாத ஒருவரால் வாழ்வில் தனிப்பட்ட முறையில் வளர்ச்சி அடைய முடிவதில்லை. மேலும் தங்கள் முன்னேற்றமின்மைக்கு தாங்களே காரணம் என்பதை இவர்கள் ஒத்துக்கொள்வதில்லை மாறாக மற்றவர்கள் மீது குறை கூறிக்கொன்டே தங்கள் காலத்தை கடத்தி விடுவார்கள்.

பெரும்பாலான நபர்கள் இந்த இரண்டு காரணங்களுக்காக மாற்றத்தை புறக்கணிக்கிறார்கள்.

## 2. தொடர்ந்து தள்ளிப்போடுவது:

பெரும்பாலும் தள்ளிப்போடும் வலையில் விழுகின்றவர்கள் தோல்வி அடைகிறார்கள். இவர்கள் தங்கள் செயல்களை அல்லது எடுக்க வேண்டிய முடிவுகளை தாமதப்படுத்துகிறார்கள், நாளை,அடுத்த வாரம் அல்லது அடுத்த மாதம் பார்த்துக்கொள்ளலாம், சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள். ஆனால் காலமும் நேரமும் நாம் நினைப்பது போல் இருப்பதில்லை.

நம் பணிகளையும், நாம் எடுக்க வேண்டிய முடிவுகளையும் தள்ளிப்போடும் இந்த பழக்கம் முடிக்கப்படாத வேலைகள் மற்றும் கவனிக்கபடாத பொறுப்புகளை அதிகரிக்கிறது இது மேலும் நம்மை கவலையடையச் செய்கிறது.

தள்ளிப்போடுதல் என்பது சோம்பேறித்தனமாக இருப்பதோ அல்லது நேர மேலாண்மை திறன் இல்லாமல் இருப்பதோ அல்ல, இது ஒரு செயலை தொடங்கினால் நாம் தோற்றுவிடுவோமோ? அல்லது அந்த செயலை எவ்வாறு தொடங்குவது என்ற பதற்றத்தினாலும் தான்.

தள்ளிப்போடுவது அதிக மன அழுத்தத்தையும், பதற்றத்தையும் அதிகரிக்காது. இது, நம் உற்பத்தித்திறனையும், முன்னேற்றத்தையும் தடுக்கிறது.தள்ளிப்போடும் பழக்கம், கவனிக்கப்படாவிட்டால், அது வெற்றியை நோக்கிய பயணத்தில் குறிப்பிடத்தக்க தடையாக மாறும்.

## 3. தெளிவான இலக்குகள் இல்லை:

வாழ்க்கையில் முன்னேற போராடுபவர்கள் பெரும்பாலும் தெளிவான இலக்கு அல்லது தெளிவான நோக்கத்தைக் கொண்டிருப்பதில்லை. வரையறுக்கப்பட்ட இலக்கு அல்லது எந்த திசையில் செல்கிறோம் என்பது தெரியாமல் நம்மால் எந்த துறையிலும் ஒரு கணிசமான முன்னேற்றத்தை அடைய முடியாது.

இலக்குகளில் தெளிவு இல்லை என்றால் எந்த செயலையும் ஊக்கத்துடன் செய்ய இயலாது. எந்த திசையில் செல்கிறோம் என்பது தெரியவில்லை என்றால் சவால்களை எதிர்கொள்ளும் ஆர்வத்தை நாம் காலப்போக்கில் இழந்து விடுவோம்.

தெளிவான இலக்குகள் இருப்பது வெற்றிக்கு மிகவும் அவசியமானது. நாம் எங்கே செல்ல விரும்புகிறோம் என்ற வரைபடத்தை உருவாக்க இது உதவுகிறது. நம் கனவுகளை அடைவதற்கான முதல் படியே ஒரு தெளிவான இலக்கு இருப்பதுதான்.

## 4. சுய முன்னேற்றத்தை விரும்புவதில்லை:


தோல்வி அடைகின்ற நபர்கள் பெரும்பாலும் சுயமுனேற்றத்தின் முக்கியத்துவத்தை கவனிக்க தவறுகிறார்கள். அவர்கள் தங்களுக்கு போதுமான அளவு அறிவு இருப்பதாக நம்புகிறார்கள் (எனக்கு எல்லாம் தெரியும்) புதிதாக திறன்களை கற்றுக்கொள்வது எந்த விதத்திலும் பயனளிக்காது என்று எண்ணுகின்றனர்.

இந்த மனநிலை அவர்களை வாழ்வில் வளர விடாமல் தேக்க நிலையில் வைக்கிறது.

சுய முன்னேற்றத்தில் ஆர்வம் இல்லை என்றால் நாம் நம் தனிப்பட்ட வளர்ச்சியை தள்ளிபோடுகிறோம் என்பதே உண்மை.

## 5. ரிஸ்க் எடுப்பதைத் தவிர்க்கிறார்கள்:

வாழ்க்கையில் ஒருபோதும் முன்னேறாத நபர்கள் பெரும்பாலும் ரிஸ்க் எடுக்க பயப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்வில் மிகவும் பாதுகாப்பாக விளையாட விரும்புகிறார்கள். ரிஸ்க் எடுக்க விரும்பாதவர்கள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள் என்பதை விட அவர்கள் மனதளவில் அச்சத்துடன் இருக்கிறார்கள் என்பது தான் பொருள். இவர்கள் வெற்றிக்கான வாய்ப்புகளை விட, தோல்விக்கான சாத்தியக்கூறுகளை தான் அதிகம் சந்திப்பார்கள்.



ரிஸ்க் எடுக்காமல் குறிப்பிடத்தக்க மாற்றத்தையோ முன்னேற்றத்தையோ அனுபவிக்க வாய்ப்பில்லை. ஆதலால், calculative risk எடுப்பது வெற்றிக்கு மிகவும் அவசியம்.

நம்வெற்றியை தடுத்து நிறுத்தும்பழக்கங்களில் இருந்து வெளியேற முயற்சி செய்வோம். வெற்றி அடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகளே வலிமை!

வலிமை... வலிமை...
எவை வலிமை?
துணிவா...? பலமா...? கருணையா...? காருண்யமா...?
செல்வமா...? நிலமா...? மனமா...? உடலா...?
இல்லை! வள்ளுவன் உரைத்த
வலிகளே வலிமை!

சிற்பத்தின் வலிமை அது பெற்ற உளியடிகளே!
ரோஜாவின் வலிமை அது சுமக்கும் முட்சுமைகளே!
நதியின் வலிமை அது கொண்டிருக்கும் கூரிய பாறைகளே!
வெற்றியாளனின் வலிமை அவன் சிந்திய வியர்வைத் துளிகளே!

தூணின் வலிமை அதை துளைத்து நிற்கும் இரும்புக்கம்பிகளே!
உடலின் வலிமை அது சுமந்து நிற்கும் உயிர்ச்சுமையே!
இரும்பின் வலிமை அது பெற்ற சுத்தியல் மிதிகளே! தார்
வீதியின் வலிமை அது தாங்கிய பாரிய அழுத்தங்களே!

அதே போல...
ஈழத்தின் வலிமை நாம் புதைத்துச் சென்ற
உயிர் விதைகளே!

முப்பத்து ஏழு வருடமாய் சேர்ந்த வலிமை-இன்றும்
சேரும் வலிமை...
என்று அது அணை உடைக்கிறதோ-அன்று அடையும்
இத்தேசம் செழிமை

நீயென எழுந்தோம்... படையென திரண்டோம்..
பேராறாய் மடை உடைத்தோம்... எம்
அடிமை வாழ்வை தகர்க்கமுனைந்த யுத்தத்தில்
சற்றுத் தவறினோம்!

காத்திருக்கிறது இம்மண் மீண்டுமோர்
குருஷேத்திரத்திற்காக..
இளஞ்சமூகமாகிய நாம் வலிகளை வலிமையாக்கி காத்திருக்கிறோம்
அறிவாயுதம் ஏந்திப் போரிட காத்திருக்கிறோம்..
காத்திருக்கவும்..

றெஸ்லின் நோபேட் ஹெமோஸ்,
யாழ்ப்பாணம்.

## வரிகளின் வடிவங்கள்




உலகில் வாழும் மனிதர்கட் கெல்லாம்
வரிகள் வாழ்வில் குறுக்கிடுமே
நிலவும் வசதிகள் கூட்டிட எம்மை
வரிகள் வாழ்வில் துரத்திடுமே

அரிதாய்த் தொழில்கள் செய்திட முயன்றால்
வரிகள் வரிசையாய் நின்றிடுமே
பரிதாபத்துடன் கொண்டு
வரிகளை நாமும் செலுத்திடுவோம்

பண்ட மாற்று பரிவர்த்தனையில்
பலகோடி வரிகள் விதித்திடுவார்
வேண்டும் வகையில் வருமானம் கூட்ட
சொத்து வரிகள் சூழ்ந்திடுமே

பட்டணந்தனிலே பகட்டாய் இருந்தால்
நீர் மின்சாரவரி கூடிடுமே
கட்டண மின்றி கருமங்கள் செய்ய
வரிகள் தடையாய் இருந்திடுமே

பணத்தைத் தேடி வெளிநாடு சென்றால்
பரிவர்த்தனத்திலும் வரிகளுண்டு
வேண்டிய தொழிலை இங்கு செய்தாலும்
வரிகள் தொடர்ந்து நீண்டிடுமே

பணத்தைக் குவித்தால் வருவது சொத்துவரி
பிணத்தை எரித்திட கொடுப்பது சுடலைவரி
வணக்கத் தலத்திலே சிரிப்பது சீட்டுவரி
கணக்கிட்டு பார்த்தால் எதிலும் வரி

எஸ்.சிவானந்தராஜா

## சுதந்திரப் பறவை

பறவைகளை கூண்டுக்குள்
அடைப்பது சரியாகுமா
இறைவனால் படைக்கப்பட்ட
உயிரினங்கள் அல்லவா
மனிதன் அடைத்து வைப்பது ஞாயமாகுமா
சுயமாக பறப்பவை பறவைக்
கூட்டங்கள், அல்லவா

எமது பெண்கள் அடுப்பங்கரையில்
வாழ்ந்தவர்கள் அல்லவா
ஆணுக்கு அடிமையாகி தலைகுனிந்து
இருந்தனரே
காலநீரோட்டத்தில் சுதந்திரப் பறவைகளாக
அதீதி செயல் புரிந்தனரே
இன்று பேச முடியாது வாய்மூடி நிற்கின்றனரே

கூண்டுக்குள் அடைபட்டு கிடக்கும் உறவுகள்
ஒருபுறம்
உரிமைச் சுதந்திரத்திற்காக போராட
முடியாத இனம் மறுபுறம்
வீதியில் உறவுகளை தேடி
கண்ணீர் விடும் தாய்க்குலம்
மதுரையை எரித்த கண்ணகியும்
ஒரு பெண்தானே
எங்கள் தாய்க்குலத்தின் கண்ணீருக்கு விடை
கிடைக்குமா?



எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## மௌனத்தின் தேடல்- 693



## துரோகத்தின் உச்சம்

சின்னஞ்சிறு உயிரியாய்
பாதங்கள் தடுமாறிட பாதைகள் தடம்மாறி
மனிதன் எனும் உயர்ந்த உள்ளங்கொண்ட
மாமனிதனை நாடி வந்திடவே
மனிதாபிமானமுள்ள மனிதனுமே
தன் பச்சிளம் குழந்தையைப் போல்
பாலூட்டி நீராட்டி பக்குவமாய் வளர்த்திடவே
பாதி வயது வந்தவுடன் பசி போக்கியவன்
யாரென்று தெரியாமலேயே பதம் பார்த்திடும்
குறுகிய குணமே துரோகத்தின் உச்சம்

ஆ.பாலமதுஜா
யா/மெதடிஸ்தபெண்கள் உயர்தரப் பாடசாலை.

## கபளீகரம்

உயிர் வாழும் அடிப்படை
உரிமை மனிதருக்கு மட்டுமா
இது உயிரினங்களுக்கும் பொருந்தும்
இங்கு இரக்க குணத்தவரால்
நன்றி உணர்விற்கு எடுத்துக்காட்டா
நன்கு கவனிக்கப்படுகின்றார்.
மறுபுறத்தில் விரும்பத்தகாதது
விறுவிறுவென்று வீறுநடையில்
மனிதத்தை விழுங்கும் கொடும் செயல்
இது இருப்பையும் இல்லாதொழித்திடும்

க.நாகராசா, நுணாவில்.

## நாம் வாழ்ந்தாலே

பாலூட்டினோம் உடல்வளர
நல்லுணவு கொடுத்தோம்
நற்பண்புகள் வளர
நாம்செய்தது தான் என்ன?
நல்வழி நடக்க
வாழ்ந்து காட்டினோமா?
இல்லை என்பதனால் தான்
பெற்று வளர்த்தவரையே
ஏப்பமிடுவதும்
கொடுமை மிகு செயல்களுமாகும்.

சி.இ.அன்புதுரை.
மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 694



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## வேடதாரிகள்

உண்மை அன்பென்று எண்ணி
பாலூட்டி வளர்த்தேன் நானும்
தீட்டிய மரத்தில்
கூர்பார்க்கும் கத்தி போல்
திமிராய்ப் பாய்ந்து
உயிரைக் குடித்ததேனோ?
வளர்த்த கடா மார்பில் பாய்ந்து
வாழ்வை மாயமாக்கி விட்டதே!
கோடரிக் காம்பு என நானும்
நினைத்ததில்லையே
காயை நகர்த்தி நீயும்
காரியம் சாதித்து விட்டாய்
வேடதாரிகளின் பொய்
வேஷங்கள் கலையும் வரை
வாழ்வில் விடிவெள்ளி
தோன்ற வாய்ப்பேது?

ஆ.செல்வி.திருநாவலூர்.

## பிறவிக்குணம்

அதன் பிறவிக்குணம் அறியாது
துஷ்ட்ட பிராணியை
அப்பிராணி என்றெண்ணி
பரிவுடன் பால்
புகட்டி வளர்த்ததுக்கு
நன்றிக்கடனாய் வளர்த்த
மனிதனையே உயிருடன்
பிடித்து விழுங்கி
தன் சுயபுத்தியைக்
காட்டியது தன் செயலால்.

சி.மகாலட்சுமி. கொக்குவில்.

## எச்சரிக்கை

எதிரிக்கும் பாலூட்டி
சீராட்டி வளர்த்தாலும்
அது சீறியே தீரும்
உன் வாழ்வை சிதைத்தே தீரும்
நீ பால் கொடுப்பது பாவத்திற்கு
ஆனால் அது உன் வாழ்வையே
அழித்து விட வல்லது

சி.சங்கவி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

"ஆண்கள் கடிந்து கொண்டால் தான் அழகாயிருக்கிறது. எதற்கெடுத்தாலும் குழைத்து கொடுப்பவன் ஆண்பிள்ளையேயல்ல. அதட்டல், கெடுபிடி, இத்துடன் அன்பு இத்தனையும் கலந்து பரிமாறும் ஆண்மகனைத்தான் பெண்கள் விரும்புகிறார்கள். இதுவும் ஒரு வேடிக்கைதான். வேடிக்கையென்ன? சிருஷ்டியின் ரகசியமும்தான் .இது இல்லாவிட்டால்...?" என்று சொல்லி மீண்டும் சிரித்தாள் அவள்.

"இப்பொழுது எதற்குச் சிரிக்கிறாய்?" என்று மறுபடியும் கடுமையுடன் கேட்டான் இளையபல்லவன்.

"முதலில் உங்கள் நிலை குறித்துச் சிரித்தேன். இப்பொழுது என் நிலை குறித்துச் சிரித்தேன்" என்றாள் மஞ்சளழகி புன்சிரிப்பு உதடுகளில் தவழ.

அவள் கண்களை உற்றுத் தன் கண்களால் நோக்கினான். இளையபல்லவன். அதன் அழகில் அவள் மனம் கடுமை பறந்தது. சித்தத்தில் மீண்டும் அனுதாபம் பிறந்தது. தனக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கம் அந்த ஏந்திழையின் ஏரார்ந்த கண்களை நோக்கிக் கொண்டே கேட்டான் இளைய பல்லவன். "ஏன்? உன்நிலைக்கு என்ன மஞ்சளழகி? என்று.

"சற்று முன் உங்கள் கேள்வியில் கடுமையிருந்தது. அதட்டிக் கேட்டீர்கள்." என்று மெள்ளச் சொன்னாள் மஞ்சளழகி, அவன் கண்களுடன் தன் கண்களை உறவாடவிட்டு.

"ஆம்! சற்றுக் கடுமையாகத்தான் கேட்டுவிட்டேன்" என்றான் இளையபல்லவன் வருத்தத்துடன்.

இருவர் முகங்களும் வெகு அருகில் நேர் எதிரில் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டிருந்தன. சற்று நெருங்கினாலும் முகங்கள் இணையும் நிலை. அந்த நிலையில் உணர்ச்சிகள் பொங்க குரல் குழைய மஞ்சளழகி சொன்னாள். மிக மெதுவாக, "வருத்தப்படுவதற்கு ஏதுமில்லை?" என்று.

"ஏன்?" ரகசியத்துடன் எழுந்தது இளையபல்லவனின் கேள்வி. அவன் விட்ட பெருமூச்சு அவள் முகத்தில் அடித்தது. அவள் இதயம் படக் படக் கென்று அடித்துக் கொண்டது.

"அந்தக் கடுமை எனக்கு வேண்டியிருந்தது" என்றாள்.

"கடுமை வேண்டியிருந்ததா!"
"ஆம், வேண்டியிருந்தது!"
"ஏன் வேண்டியிருந்தது?"
பெண்ணின் நிலை அது?"
"கடுமையை வேண்டும் நிலையா!"

"ஆம் காதலித்தவன் கடிந்து கொள்வதில்தான் பெண்களுக்கு இன்பம். ஆடவனிடம் அடங்கத்தான் பெண் விரும்புகிறாள். ஆளத் தெரியாதவனிடம் பூமி எப்படி நிலைப்பதில்லையோ அப்படியே அடக்கத் தெரியாதவனிடம் பெண்ணும் நிலைப்பதில்லை."

"பெண்களுக்குச் சுதந்திரம்" என்று எதையோ முணுமுணுத்தான் இளையபல்லவன்.

"வெறும் பேச்சு," என்றாள் மஞ்சளழகி.

"ஏனப்படிச் சொல்லுகிறாய் மஞ்சளழகி?" என்று மெதுவாகக் கேட்டான் இளையபல்லவன்.




காலத்தின் பதிவு 87

## விளங்கிய சம்பத்து

"சுதந்திரம் அவள் அழகைக் கெடுக்கிறது. அடக்கம் அவள் அழகைக் கூட்டுகிறது?" என்றாள் மஞ்சளழகி.

"விசித்திரமாயிருக்கிறது உன் வாதம்" என்றான் இளையபல்லவன்.

"சிருஷ்டியைப் புரிந்து கொள்ளாதவர்களுக்குத்தான் விசித்திரம்."

"நீ புரிந்து கொண்டுவிட்டாயா?"

"புரிந்து கொண்டுதான் சொல்லுகிறேன்." என்ற மஞ்சளழகி அவன் கண்களைத் தன் கண்களால் தொட்டுவிடுவதுபோல் பார்த்துக் கொண்டே ஏதோ புது ரகசியம் சொல்வது போல் பேசினாள். "இதோ பாருங்கள் இளைய பல்லவரே! என் வாதமல்ல இது. உண்மையைச் சொன்னேன். இயற்கையை நன்றாக உற்றுப் பாருங்கள். அடக்கமுள்ள பெண்களுக்கு இருக்கும் அழகு அடக்கம் இல்லாத பெண்களுக்கு இருப்பதில்லை. தலைகுனிந்த பெண்ணிடமிருக்கும் அழகு தலை குனியாமல் நிமிர்ந்து நடக்கும் தருணிகளிடம் கிடையாது. அச்சப்பட்டும், வெட்கப்பட்டும் கூனிக் குறுகும் குமரிகளிடமுள்ள அழகு, உணர்ச்சிகளைக் கைவிட்டு உலாவும் காரிகைகளிடம் கிடையாது.

சுதந்திரத்தை ஆடவனிடம் பறிகொடுத்து அடங்கி அவனிடம் வாழும் பெண்ணின் அழகு தெய்வீகமானது அந்த அடக்கத்தில் சுதந்திரத்தை இழப்பதில் மகத்தான சக்தி பெண்களுக்கு ஏற்படுகிறது..." என்று ஏதோ பெரும் தத்துவத்தைச் சொல்வதுபோல் மிக ரகசியமாகச் சொற்களை உதிர்த்த மஞ்சளழகி சிறிது தன் விளக்கத்தை நிறுத்தினான். (தொடரும்...)

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 33

## பாரதியின் பின்புலங்கள்

புலமையின் உச்சியிலிருந்து, எளிமைத் தளத்திற்கு இறங்கி வந்து கவிதைகளால் மக்களோடு பேசினான்.


பேராசிரியர் டாக்டர். ஆ.சீ.நிவாசராகவன் அவர்கள் குறிப்பிடுமாறு போல,

**"கவிதை என்பது புலமையின் பொழுபோக்கன்று எளிமை என்பது வெறுமையன்று!"**

என்பதைப் பாரதி தெளிவாகவே தெரிந்து வைத்திருந்தான். எனவே தான் பாரதியின் கவிதைக் கொள்ளை என்று சிதம்பர ரகுநாதன் போன்ற திறனாய்வாளர்கள் பர்ஞ்சாலி சபத முன்னுரையை முடிவு கட்டுகிறார்கள். அது இது:

**"எளிய பதங்கள்; எளிய நடை; எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம்; பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமென்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்."**

(பாஞ்சாலி சபதம்: முகவுரை: பாரதியார்)



இதனைப் பாரதியின் ஒரு வேண்டுகோள் என்ற தொனியிலே அல்லாமல் பாரதியின் 'கவிதைக் கட்டளை' என்று கொள்வதே பொருந்தும். தமிழ் இலக்கிய வரலாற்றில், அதிக மொழிகள் தெரிந்து கவிஞனாக நமக்கு அடையாளந்தெரிகிறவன் பாரதி ஒருவனே.

**"யாமறிந்த மொழிகளிலே"** என்றவன் செருக்கோடு சொல்வதற்கு பொருளுண்டு.

இளமைக் கல்விக்காகக் காசியிலே அவன் தங்கியிருந்த இரண்டு மூன்று ஆண்டுகள் வெறும் எட்டயபுரத்துச் சுப்பையாவைப் பாட்டுலகத்தில் பாரதி ஆக்குவதற்குரிய விதைகளைத் தூவின. காசியிலே பாரதி கற்ற மொழிகள் மூன்று 1 ஆங்கிலம், 2.இந்தி, 3. வடமொழி (சமஸ்கிருதம்).

காசிக் கல்வியால் பாரதி பெற்ற பயனை இப்படிச் சொல்கிறார் பேராசிரியர் அ.சீ.நிவாசராகவன்:

**"ஆங்கிலத்தின் மூலமாகப் பெரும்பாலும் காதலையும் இலட்சியத்தையும் ஒன்றாக இசைத்துப் பாடிய பைரனுடைய கவிதையும் ஷெல்லியின் இலட்சிய நாட்டமும், கனவுலகைச் சஞ்சாரமும், இந்தத் தமிழ்ச் சிறுவனுடைய உள்ளத்தைத் தொட்டன. இத்தாலிய தேச பக்தன் மாஜினியின் வாழ்க்கையைப் பற்றிய செய்திகளும், அவன் வசித்த சுதந்திர வேட்கையும், வீரத்துணிவும் ஆங்கிலத்தின் மூலமாகச் சுப்பையாவுக்குக் கிடைத்தன."**

(ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை: பக்கம் 75)

இந்த மேற்கோள் வரிகளினின்றிம் புலனாவன இரண்டு கருத்துக்கள். முதலாவது பாரதியின் ஆங்கிலக் கல்வி அவனுக்கு இலட்சிய வேட்கையை வளர்த்தது. இரண்டாவது, அவன் கற்ற வடமொழிக் கல்வி அவன் நெஞ்சில் சமய தத்துவங்களுக்குக் கால்கோள் செய்தது.

**"பாரதியைப் பொறுத்த மட்டில் இளமையில் பெற்ற துன்பங்களும் மறுவேளைச் சோற்றுக்கு என்ன செய்யப் போகின்றோம் என்று கலங்கிய கலக்கமும், அலகாபாத், காசி போன்ற இடங்களில் சென்று வடமொழி, இந்தி ஆகிய மொழிகளைக் கற்ற அறிவும், வடமொழி இலக்கிய ஊற்றில் திளைத்த அனுபவமும் அவருடைய தெய்வ பக்தியை வளர்ப்பதற்குக் காரணமாய் அமைந்தன."**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 376

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# மதங்களும் மருத்துவமும்...

உலகெங்கும் பரந்து வியாபித்து வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனை நெறிப்படுத்தி சுகமும் பலமும் பொருந்திய ஒரு முழு மனிதனாக வாழ்வதற்கு அனைத்து மதங்களும் வழிகாட்டி நிற்கின்றன. உலக சுகாதார அமைப்புக்கள் பலவும் மனிதனின் உண்மையான சுகம் என்றால் என்ன? மனிதனின் உண்மையான ஆரோக்கியம் என்றால் என்ன? என்று ஆராய்ந்துகொண்டிருக்கின்றன.

ஆரோக்கியம் என்பது நோயற்ற நிலை மாத்திரமல்ல அதனுடன் உள, சமூக, ஆன்மிக, சுற்றாடல் நன்னிலையும் சேர்ந்த ஒரு உன்னத நிலையே உண்மையான சுகம் என்று பல உலக சுகாதார விற்பன்னர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

மதங்களினதும் மருத்துவத்தினதும் அடிப்படைத் தத்துவம் "அன்பு, பரிவு, ஒருவனுக்கு உண்மையான சுகத்தையும் நலத்தையும் கொடுப்பது" என்ற அடிப்படையில் ஒன்றுபடுவதை நாம் அறிவோம். மருத்துவம் ஒருவனுக்கு இந்தப் பிறப்பிலே அன்பும் ஆதரவும் சுகமும் நலமும் கொடுப்பதைப்பற்றி சிந்திக்கிறது. செயலுருவம் கொடுக்கத் துடிக்கிறது. ஆனால் மதங்கள் இம்மையிலும் மறுமையிலும் அவனின் உடலினதும் ஆன்மாவினதும் சுகம் பற்றியும் நலன் பற்றியும் சொல்லி அதற்கான வழியைக் காட்டி நிற்கின்றன. உண்மையான ஆன்மிகமும் அறிவியலும் இரு துருவங்கள் அல்ல. ஒருவனுள் இருந்து துடித்துக்கொண்டிருக்கும் நம்பிக்கைச் சுடரே ஒரு ஆரோக்கியமான விடியலைக் கொடுக்கின்றது.

மதங்கள் எப்பொழுது தோற்றம் பெற்றன. மருத்துவ முறைகள் எப்பொழுது தோன்றின. மனிதனின் அறிவியல் எப்படி தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டது என்ற கேள்விகள் ஆராய்ச்சிக்குரிய விடயங்களாக, புரிந்துகொள்ள கஷ்டமான புதிர் முடிச்சுக்களாக இருந்தாலும் அந்த முடிச்சுக்கள் தற்பொழுது மெல்ல அவிழ ஆரம்பித்திருக்கின்றன.

ஆன்மிகத்தை அறிவியல் கண்ணோடு நோக்கும் போது பல பல சுவாரசியமான விடயங்கள் வெளிச்சத்துக்கு வருவதை அவதானிக்கின்றோம். அன்றுதொட்டு மதங்கள் மனிதனை எவ்வாறு வழிநடத்தி வருகின்றன என்பதை ஆராயும் பொழுது பல அற்புதமான தத்துவங்களின் அடிப்படை எமக்கு புரியத் தொடங்கும்.

மதங்கள் பற்றிய இந்தப் புரிதல் ஒரு சமூகத்தின் சுகாதார நிலையை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும். இந்தத் திசையிலான எமது தேடல் பயனுடையதாக அமையும்.

மனிதன் எப்பொழுது தோன்றினான்? மதங்களும் அதன் தத்துவங்களும் எப்பொழுது தோற்றம் பெற்றன? மருத்துவ முறைகளும் வைத்தியமும் எப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டன? அறிவியலும் விஞ்ஞானக் கருத்துக்களும் எவ்வாறு முக்கியத்துவம் பெற ஆரம்பித்தன? என்பது சம்மந்தமாக தெளிவுபெற வேண்டிய தேவை இருக்கிறது. மனிதகுலம் இந்தப் பூமியிலே அவதரித்து 5000 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. மதக் கருத்துக்களும் தத்துவங்களும் வெவ்வேறு காலப்பகுதிகளில் தோற்றம் பெற்றிருக்கின்றன. இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் கி.மு. 3500 வருடங்களுக்கு முன் சிந்துவெளிப் பிரதேசத்திலே தோற்றம் பெற்றிருந்ததாக புதைபொருள் ஆராய்ச்சிகள் சான்று பகர்கின்றன.

ஆனால் தற்போது அறியப்படாமல் இருக்கும் வேறு சில மதங்களின் அடிப்படைக் கருத்துக்கள் அதற்கு முன்னதாகவே தோற்றம் பெற்றிருக்கக்கூடும். அக்காலப் பகுதியில் மருத்துவப்பொருட்கள், அறுவை மருத்துவம், நோய்த்தடுப்பு முறைகள் ஆகியவை அக்கால மக்களால் அறியப்பட்டிருந்தன என்பதற்கான வரலாற்று சான்றுகள் பல கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

இற்றைக்கு 5500 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.மு 3500 வருடங்களுக்கு முன்பே நடைமுறையிலிருந்த மருத்துவ முறைகளும் மனித ஆரோக்கியத்தைப் பேணும் நடவடிக்கைகளும் முதன் முதலாக எப்பொழுது தோற்றம் பெற்றன என்பது சம்பந்தமான தெளிவான ஆதாரங்கள் இல்லை. ஆனால் மதத்தின் தத்துவங்களும் ஆன்மிகக் கருத்துக்களும் மருத்துவம் வளர்ச்சி பெறுவதற்கு முன்பே தோற்றம் பெற்றிருப்பதற்கான சாத்தியக்கூறுகளே இருக்கின்றன.

மதங்களுக்கும் மருத்துவத்திற்கும் இடையிலான நெருக்கம் எவ்வளவு இறுக்கமானது என்பதை நாம் அனைவரும் அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். இது மனித குலத்தின் ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக இருக்கும். மன அமைதியும் ஆரோக்கியமும் வேண்டி நிற்கும் மனிதர்கள் ஆன்மிகத்துறையிலே நாட்டம்கொள்வதும், மதநிறுவனங்களும் ஆன்மிக நிறுவனங்களும் மருத்துவச் சேவைக்குப் பெரும் பங்காற்றி வருவதும் மதத்திற்கும் மருத்துவத்திற்குமான நெருக்கத்தைக் காட்டி நிற்கின்றன.

பல கிறிஸ்தவ மத நிறுவனங்களும் இந்துமத நிறுவனங்களும் மருத்துவச்சேவைக்குப் பெரும் பங்காற்றி வருகின்றன. உளவளத் துணைக்கும் பாதிக்கப்பட்டவர்களின் ஆற்றுப்படுத்துகைக்கும் கிறிஸ்தவ அமைப்புகள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. பல மதம் சார்ந்த அமைப்புகள் வைத்திய சாலைகளையே வழிநடத்தி வருகின்றன. இவ்வாறாக மதத்திற்கும் மருத்துவத்திற்குமான நெருக்கம் எப்பொழுது ஏற்பட்டது? இது சம்பந்தமாக எமது பண்டைய நூல்களிலே என்ன சொல்லப்பட்டிருக்கின்றன? என்பதை ஆராயும்பொழுது பல வியத்தகு தகவல்களை நாம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

சிந்துவெளிப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற இந்துமதக் கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு அது இந்து மதமாகத் தோற்றம் பெற்றது கி.மு. 1500 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதி என்று கருதப்படுகிறது. இதனை வேத காலம் என்று சொல்லுவார்கள். இந்த வேத காலத்திலே மதப்பெரியவர்கள் மருத்துவத் தொண்டையும் ஆன்மிகத் தொண்டையும் ஒருங்கே ஆற்றி வந்ததற்கான சான்றுகள் தென்படுகின்றன. தற்போது நடைமுறையில் இருக்கும் இந்துமதக் கருத்துக்கள் அடிப்படையிலே வேதங்களையும் தொடர்ந்து வந்த உபநிடதங்களையும் குருமார்களின் அறிவுரைகளையும் அத்திபாரமாக வைத்தே வளர்ச்சி பெற்றிருக்கின்றன என்பதை அறியக்கூடியதாக இருக் கிறது.

மனிதன் நாகரீகத்திலே வளர்ச்சி பெற்று வந்த இந்தக் காலப்பகுதியிலே நல்ல பல கோட்பாடுகளுடன் இன்னும் பல மதங்கள் தோற்றம்பெற்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற மதங்கள் மனிதனின் உடல், உள, சமூக, ஆன்மிக நன்னிலைக்கான பாதையைக் காட்டி நிற்கின்றன.

ஆதிகால மருத்துவமுறைகளிலே சித்தமருத்துவமானது மிகவும் முக்கியமான மருத்துவ முறையாகக் கருதப்படுகிறது. இது அன்றுதொட்டு இன்று வரை பலருக்கு ஆரோக்கியத்தை அள்ளி வழங்கிக்கொண்டிருக்கிறது. இது திராவிடர்களின் மருத்துவமுறையாக வளர்ச்சி பெற்றிருப்பதால் இன்றும் தமிழர்களுக்கு பெருமை சேர்த்து நிற்கிறது. இந்த சித்த மருத்துவமானது எப்படித் தோற்றம் பெற்றது? இதன் அடிப்படைக் கருத்துக்கள் எங்கிருந்து கிடைக்கப்பெற்றன? இதற்கும் மதம், ஆன்மிகம் என்பவற்றிற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? என்பதை நோக்குவோம்.

சித்த மருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்திலே சிவனினால் சக்தியிடம் கையளிக்கப்பட்டு சக்தி அதனை நந்தியிடம் கொடுத்து நந்தி அதனை சித்தர்களிடம் சேர்ப்பித்தார் என்று பண்டைய நூல்களிலே தெரிவிக்கின்றன. இந்தத் தத்துவங்கள் ஆரம்பத்திலே 18 சித்தர்களினால் கையாளப்பட்டிருக்கின்றன. இந்த சித்தர்களிலே முக்கியமானவராக அகத்தியர் இருந்திருக்கிறார். இந்த அகத்தியரின் தலைமையிலேயே சித்த மருத்துவம் முழுமையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த சித்த மருத்துவத் துறையின் தோற்றம் பற்றிய இந்த கருத்துக்களை நம்புகிறோமோ என்பது முக்கியமல்ல. இது அவசியமும் இல்லை. ஆனால் அக்காலத்திலிருந்தே மதமும் மருத்துவமும் ஒருங்கிணைந்து செயற்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கிறது.

(தொடரும்)

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி யுத்த நிறுத்தத்தை கோரும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை

## எதிர்க்கும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

**இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் பெரும் இழப்பை சந்தித்துவரும் காசாவில் உடனடி யுத்த நிறுத்தத்தை கோரும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது.**

உடனடி யுத்த நிறுத்தத்தை கோரும் தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியமைக்கு எதிராக கடும் கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேல் அநீதிகளில் ஈடுபடுகின்ற நிலையில் தொடர்ந்தும் அதற்கு இராஜதந்திர பாதுகாப்பையும் ஆயுதங்களையும் வழங்குவதன் மூலம் யுத்த குற்றங்களிற்கு உடந்தையாகும் ஆபத்தை அமெரிக்கா எதிர்கொள்கின்றது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் எச்சரித்துள்ளது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானத்திற்கு ஆதரவாக 13 நாடுகள் வாக்களித்துள்ள நிலையில் பிரிட்டன் வாக்கெடுப்பை தவிர்த்துள்ளது. (நி-5)

# வெப்பநிலை அதிகரிப்பால் மூண்டுள்ள தீப்பரவல்

## கட்டுப்படுத்த அவுஸ்திரேலியாவில் மின்சாரம் துண்டிப்பு



(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் பல பகுதிகளில் வெப்பநிலை 40 செல்சியசிற்கும் அதிகமாக காணப்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. தாஸ்மேனியாவைத் தவிர ஏனைய அனைத்து பகுதிகளிலும் கடும் வெப்பநிலை நிலவுகிறது.

அந்தவகையில் தென் அவுஸ்திரேலியா மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மாநிலத்தின் பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரிப்பினால் மூண்டுள்ள தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் தீயணைப்பு பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

அதே சமயம் கடும் காற்று, மின்னல், கடும் வெப்பம் காரணமாக தென் அவுஸ்திரேலியா, கிழக்கு அவுஸ்திரேலியா, வட மேற்கு அவுஸ்திரேலியா, தென்கிழக்கு நியுசவுத் வேல்ஸ் ஆகிய பகுதிகளில் கடும் தீ ஆபத்துள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென் அவுஸ்திரேலியாவில் ஆபத்தான தீ நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான தீவிர முயற்சிகள் இடம்பெற்றுவரும அதே வேளை 35000 பேருக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# காசாவைப் போல் லெபனானும் பேரழிவை சந்திக்க நேரிடும்

## ஹிஸ்புல்லாவிற்கு எச்சரிக்கை விடுத்த இஸ்ரேல்



(ஜெருசலேம்)

ஹிஸ்புல்லா அமைப்பினர் அவ்வப்போது இஸ்ரேல் மீது மேற்கொள்ளும் தாக்குதலை கண்டித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள எச்சரிக்கையில் "ஹிஸ்புல்லா முழு அளவில் போரை தொடங்க முடிவு செய்தால், காசாவைப் போலவே லெபனானும் பேரழிவை சந்திக்க நேரிடும் என எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவத்துக்கு சொந்தமான பீரங்கிகளை குறிவைத்து லெபனான் நாட்டிலிருந்து ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில் இஸ்ரேல் நாட்டு விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதற்குப் பதிலடி தரும் விதமாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா நிலைகள் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தியது.

இதேவேளை ஹிஸ்புல்லா அமைப்பினர் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சென்னையில் வடிந்த வெள்ளம் வீதியில் குவிந்த குப்பைகள்



(டில்லி)

வரலாறு காணாத வகையில் மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட கடும் மழையால் சென்னை முழுவதும் வெள்ளத்தால் மூழ்கியது. மழை ஓய்ந்த பின்னரும் வெள்ளம் வடிந்தோடாத காரணத்தால் இன்றும் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஒரு சில இடங்களில் வெள்ளநீர் வழிந்தோடிய பின்னர் சாக்கடை தேங்கியுள்ளதை காணக்கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளுக்குள் புகுந்த வெள்ளநீரோடு கழிவுநீரும் சேர்ந்ததன் காரணமாக பல பொருட்களை மீள பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு அவற்றை அப்புறப்படுத்துவதிலும் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

வீதியெங்கிலும் வெள்ளம் புரண்டோடியதால் துர்நாற்றம் வீசும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நோய் பரவும் அபாயம் காணப்படுவதால் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியல் மக்கள் குப்பைகளை வீதிகளில் கொட்டி குவித்துள்ளனர்.

11, 700 தூய்மை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் , இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பத்தாறு சுகாதார பணியாளர்கள் வெளி மாவட்டங்களில் இருந்து அழைத்து வரப்பட்டு மருத்துவ முகாம்கள் மற்றும் நோய்தடுப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கைப் பாலம் உடனடி நடைமுறைக்கு சாத்தியமில்லை

## இந்திய ஊடகம் செய்தி வெளியீடு

(டில்லி)

உட்கட்டமைப்பு மேம்பாடு, எரிசக்தி இணைப்புகள் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை மேம்படுத்த வேண்டும் என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அண்மையில், இந்தியாவுடன் தரைவழி இணைப்பை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவை மேற்கொண்டிருந்தார்.

எனினும் அது உடனடியாக நடைமுறைக்கு வரப்போவதில்லை. முன்னதாக இருபது ஆண்டுகளுக்கு முன்னரும் சென்னையில், அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள தலைமன்னாருடன் தமிழ்நாட்டில் உள்ள இராமேஸ்வரத்தை இணைக்கும்பாலம்கட்டும்யோசனையை முன்வைத்திருந்தார்.

இது பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு பற்றிய அவரது பெரிய பார்வையின் ஒரு பகுதியாகும். இது இலங்கையையும் இந்தியாவின் தென் மாநிலங்களையும் உள்ளடக்கியது. மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது.

எனினும் சிங்கள-பௌத்தர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் குழுக்களும் கட்சிகளும் இலங்கைக்கு எந்தப் பயனும் தராது என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்திற்குத் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின் றன.

2015 டிசெம்பரில் இந்தியாவின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்கரி, 24,000 கோடி ரூபாய் மதிப்பிலான இலங்கை-இந்திய பாலத் திட்டத்திற்கு நிதியளிக்க ஆசிய அபிவிருத்தி வங்கி தயாராக இருப்பதாக மக்களவையில் தெரிவித்தபோது, எதிர்ப்பாளர்களின் கடுமையான விமர்சனங்கள் காரணமாக இலங்கையின் பதில் முடக்கப்பட்டதாகவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையிலேயே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு இப்போது இருப்பதை விட ஆழமாக இருக்க வேண்டும் என்றும் குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது. (நி-5)

# வேகமாக அதிகரிக்கும் முட்டையின் விலை

(கொழும்பு)

பண்டிகைக் காலம் நெருங்கி வருவதால் முட்டை விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 42 முதல் 45 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்ட வெள்ளை முட்டை ஒன்றின் விலை தற்போது 50 ரூபாவை தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவப்பு நிற முட்டை ஒன்று 53 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை முட்டை 50 ரூபாவிற்கும் சிவப்பு முட்டை 53 ரூபாவிற்கும் விற்பனை செய்யுமாறு அகில இலங்கை முட்டை வியாபாரிகள் சங்கம் முட்டை மொத்த வியாபாரிகளுக்கு அறிவித்தது.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நெருங்கி வருவதால் முட்டைகளுக்கு வழக்கத்தை விட அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. (நி-5-6)

# வெளியுறவு அமைச்சர் கட்டாருக்கு விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று கட்டாருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

டோஹா மன்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக குறித்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

உலகம் எதிர்கொள்ளும் முக்கியமான சவால்களைப் பற்றி விவாதிக்க ஒரு செயல் திட்டத்தை உருவாக்க தலைவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது வெளிவிவகார அமைச்சர் கட்டார் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 10 கோடி பெறுமதியான 'குஷ்' கட்டுநாயக்கவில் மீட்பு

(கொழும்பு)

பயணப் பொதி ஒன்றிலிருந்து 10 கோடி ரூபாய் பெறுமதியான குஷ் போதைப்பொருள் தொகையை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் தொகை கனடாவிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேல்மாகாண புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து இந்த போதைப்பொருள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளன.

விமான நிலைய சுங்கத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில், குறித்த போதைப்பொருள் தொகை கனடாவிலிருந்து துபாய்க்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து கடந்த 14 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கி வந்த UL226 என்ற ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் குறித்த போதைப் பொருள் அடங்கிய பயணப் பொதி கொண்டுவரப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.


இந்த விடயம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன், கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2985

கீதா




சஞ்சேய்




யேசுதா




உஷானா




தர்சினி




அபிசேய்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் இரவுகளின் வணக்கத்தைவிட ஒரு மணி நேரம் அறிவுரை புகட்டுவது மேலானது.

– நபிகள் நாயகம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குகனொடும் ஐவரானோம் என்று இராமர் உரைத்ததேன்?

கைகேயியினால் பட்டாபிஷேகம் குழம்பிப் போகிறது. நாடாள வேண்டிய இராமபிரான் காடேகுவதற்காக மரவுரி தரிக்கிறார். கூடவே சீதையும் இலக்குவணனும் மரவுரி தரித்து காடேகின்றனர்.

அயோத்தி மாநகர் மின்சாரம் தடைப்பட்ட இலங்கை போல் இருண்டு கிடக்கிறது.

தவிர்க்கவும் தடுத்து நிறுத்தவும் வழியின்றி அயோத்தி மக்கள் விம்மி விம்மி அழுகின்றனர்.

காடு செல்வதற்காக கங்கைக் கரையை இராமர் தரப்பு வந்து சேர்கிறது.

கங்கைக் கரையை இராமர் வந்தடைந்தார் என்ற செய்தியறிந்த குகன் தேனும் மீனும் கொண்டு இராமரிடம் சென்று அவரை வணங்கி ஏற்றிட வேண்டும் எனப் பணிந்து நிற்கின்றான்.

இராமபிரானுக்குமீன்உகந்ததா என்றகேள்வி இன்றுவரை மக்களை உறுத்தவே செய்கிறது.

இங்குதான் குகனின் அன்பு மேலோங்கி நிற்பதைக் காண முடியும்.

ஆம், அன்புதான் இங்கு முதன்மையானது. அன்போடு ஈகின்ற எதுவும் இறைவனுக்கு நிவேதனமே. அதனால்தான் குகன் அன்போடு கொண்டுவந்த மீனையும் தேனையும் இராமபிரான் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

கங்கை வாழ் குகன் வேடுவர் குலத்தலைவன். ஆயினும் தசரத மாமன்னனின் புத்திரன் இராமபிரான் குகனைத் தனது தம்பியாகப் பிரகடனம் செய்கின்றான்.

அதனைக் கம்பன் "குகனொடும் ஐவரானோம்..." என்றுரைப்பான்.

ஆம், இராமன், இலட்சுமணன், பரதன், சத்துருக்கன் ஆய நால்வர் தசரத புத்திரர்கள். இப்போது குகனையும் சேர்த்து நாங்கள் ஐவரும் தசரத புத்திரர்கள் என்பது இராமரின் அறிவிப்பு.

குகன் எங்களின் சகோதரன் என்று இராமர் அறிவித்த கணமே அவன் தசரத புத்திரனாகி அயோத்தி மாநகரின் ஆட்சிக்குரியவனாகிறான்.

இங்குதான் இராமபிரானின் பெருந்தன்மை துலங்குகிறது.

அதுசரி. குகனைவிட வேறு எவரும் இராமர் மீது அன்பு காட்டவில்லையா? இராமரை நேசிக்கவில்லையா? எத்தனையோ மக்கள் இராமபிரானைத் தங்கள் பிள்ளையாக நினைத்திருந்தபோது, அவர்களையெல்லாம் தன் சகோதரர் பட்டியலில் சேர்க்காத இராமபிரான் வேடுவனாகிய குகனை தன் சகோதரனாக ஏற்றுக் கொண்டு அதனைப் பிரகடனப் படுத்தியது ஏன்? என்ற கேள்வியெழுவதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

இங்குதான் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது இராமபிரானை நேசித்தவர்கள் ஏதோவொரு வகையில் அவருடன் தொடர்புடையவர்கள்.

தவிர, பட்டத்துக்குரிய இளவரசன் மீது அன்பு காட்டுவதில் கூட ஒரு சுயநலம் உண்டு.

ஆனால் குகன் அவ்வாறல்ல. பட்டாபிஷேகம் குழம்பிக் காடு செல்வதற்காக கங்கைக் கரைக்கு இராமன் வந்தவேளை, அவன் மீது அன்பு கொள்வதென்பது ஈடுஇணையற்றது. அதனாலேயே குகனொடும் ஐவரானோம் என்று இராமபிரான் விழித்துரைத்தார்.

அட! இதைச் சொல்லும்போதுதான் இந்தியாவை நம்புங்கள். ஈழத் தமிழ் மக்களின் நலன்களில் நாங்கள் அக்கறையாக இருக்கிறோம் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் அமைச்சர் ஜெய்சங்கரும் அடிக்கடி கூறுகின்றனரே தவிர, நாம் துன்பப்படும் வேளையில் அவர்கள் உதவமுன்வரவில்லை என்பதுதான் பெருங்கவலை.

# சிறு குற்றங்கள் செய்பவர்களை வீட்டுக் காவலில் வைக்க யோசனை

## நீதி அமைச்சர் விஜயதாச

வறுமை அல்லது வேறு காரணங்களால் சிறு குற்றங்களைச் செய்யும் நபர்களை சிறையில் அடைப்பதற்குப் பதிலாக வீட்டுக் காவலில் வைப்பது போன்ற தண்டனைகளை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

சிறு குற்றங்களைச் செய்யும் நபர்களை சிறையில் அடைப்பதற்குப் பதிலாக, அந்த நபரின் பெற்றோர் அல்லது உறவினர்களிடம் பத்திரத்தில் கையொப்பமிட்டு அவர்களை ஒப்படைக்க முடியும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறிய தவறு செய்தவர்களை சிறையில் அடைப்பதற்கு பதிலாக, அவர்களின் உடலில் 'சிப்' பொருத்தி, வெளிநாடுகளில் உள்ளதைப் போன்று தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அவர்களின் நடமாட்டத்தை கண்காணிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

சில நீதிமன்றங்கள் சிறு குற்றங்களை செய்தவர்களை சிறையில் அடைப்பதோடு, பிணை வழங்குவதில் நீதிமன்றங்கள் தனது விருப்புகளை காட்டி வருகிறது.

இந்த நாட்டின் சட்டப்படி விசாரணைகள் நிறைவடையாதது, சில இளைஞர்கள் சிறையில் இருந்து விடுதலை போன்ற காரணங்களால் பிணை மறுக்க வாய்ப்பு உள்ளது. எனவே, பிணை வழங்கும் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வதாக நம்புவதாக அமைச்சர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பள்ளிவாசல் காவலாளி ஹட்டனில் படுகொலை

ஹட்டன் பகுதியிலுள்ள பள்ளிவாசலின் காவலாளி மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலில் அவர் உயிரிழந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பள்ளிவாசலில் இருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் ஜூம்மா பள்ளிவாசலில் சுமார் இரு வருடங்களாக காவலாளியாக பணியாற்றிவரும் ஹட்டன், ஹிஜிரபுர பகுதியைச் சேர்ந்த சி.எம். இப்ராஹிம் (வயது - 67) என்பவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பள்ளிவாசலின் உண்டியல் பல தடவைகள் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்காகவே காவலாளி நியமிக்கப்பட்டிருந்ததாக பள்ளிவாசல் நிர்வாக சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## போதை மாத்திரைகளுடன் தலைமைப் பிக்கு கைது

கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளை வைத்திருந்த பாடசாலை ஆசிரியர் மற்றும் தலைமைப் பிக்கு ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உப்புவெளி பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உப்புவெளி பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் போது, 17 போதை மாத்திரைகள், 80 மில்லி கிராம் கஞ்சா, 04 கையடக்கத் தொலைபேசிகள், 02 எரிவாயு சிலிண்டர்கள், மற்றுமொருவரின் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் நான்கு தேசிய அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டதோடு இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஆனந்தம் குளம் சோமரதன என்ற பிக்கு 4 ஆம் கட்டை என்ற பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் விஹாராதிபதியாக பதவி வகித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## சீனாவுக்கான விசா கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முயற்சியில், உள்வரும் பயண விசாக்களுக்கான கட்டணத்தை தற்காலிகமாக 25 வீதத் தால் குறைப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை சீனாவின் அனைத்து வெளிநாட்டு தூதரகங்களுக்கும் இந்த நடவடிக்கை பொருந்தும் என சீனாவின் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும், எளிதாக எல்லை தாண்டிய பயணத்திற்கு அதிக வசதியை வழங்குவதற்கும் தொடர்புடைய நாடுகளுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக உள்ளோம் என வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் வெளியிட்டுள்ளார். (ம-7)

## திடீர் மின்வெட்டு தொடர்பில் புலனாய்வு பிரிவு விசாரணை

(கொழும்பு)

நாடு முழுவதும் திடீர் மின்வெட்டு எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பில் விசேட விசாரணைகளை மேற்கொள்ள புலனாய்வுப் பிரிவு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மின்வெட்டு ஏற்பட்டது என்பது எந்த தரப்பினருக்கும் தெரியாததால், இது திட்டமிட்ட சதியா என்பது குறித்தும் அரசின் கவனம் குவிந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

குறிப்பாக பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின் பின்னணியில் இது புதிய மின்சார சட்டத்திற்கு எதிரான திட்டமிட்ட நடவடிக்கையா என்பதை கண்டறிய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், கொத்மலை மற்றும் பியகமவில் மின் விநியோக முறைமையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த மின்வெட்டு பாதிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"ஆரோக்கியமான பெண்கள் தான் ஆரோக்கியமான சமூகத்தின் அடித்தளம். பாரபட்சமின்றி வலுவூட்டுவோம் குடும்பத்தில் பெண்களை!!!"

JSAC
16
2023

யாழ். சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் நேர்மையானவர் என்பதாலே தமிழர்கள் அவர் பின்னால் அணி திரண்டனர்

## அருட்தந்தை சக்திவேல்

(திருமலை)

பிரபாகரன் நேர்மையானவர் அவரின் அரசியல் நீதிநேர்மையானது என்பதை தமிழர்கள் எப்போதோ கண்டு கொண்டதால்தான் அவருக்கு பின்னால் அணி திரண்டனர் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கைகளில் தனக்கு உடன்பாடு இல்லை என்ற போதும் அவர் ஒரு நேர்மையான தலைவர் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்திருந்தார்.

அவரது கருத்து தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அண்மையில் அருட்தந்தை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"பிரபாகரன் நேர்மையான ஒரு தலைவர். இறுதிவரை போராடிய ஒரு தலைவர்" என அண்மையில் நற்சான்று கொடுத்திருக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன. இக்கூற்று தாம் தலைவர்களாக நினைத்துக் கொண்டிருப்பவர்களின் கடந்த கால வாழ்வை பார்த்து வெட்கிய நிலையில் அவரின் உள்ளத்தில் இருந்து எழுந்ததாயின் வரவேற்கிறோம்.

பிரபாகரன் நேர்மையாளர் எனக் கூறிய கமால் குணரத்தின அவரது கொள்கை எனக்கு பிடிக்கவில்லை என்று கூறுகிறார். கொள்கை பிடிக்கவில்லை என்பதற்காக அவரையும் அவருக்கு பின்னால் இருந்தவர்களையும் பொதுமக்களையும்படுகொலை செய்ததை வருடம் தோறும் விழா எடுக்கின்றீர்கள். இதுதான் உங்கள் கொள்கையா? உங்கள் தலைவர்களில் மூவரினதும் அவர்களது சகாக்களினதும் பிழையான பொருளாதார கொள்கை திட்டமிடலால் நாடு வறுமைக்குள் என உயர்நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியது.

பிரபாகரனின் கொள்கையும் அரசியல் நீதியும் அதனை அடைவதற்கான செயற்பாடுகளும் தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் ஏன் முழு நாட்டுக்குமே பாதுகாப்பாக இருந்தது. அதனை அமுல்படுத்த சிங்கள தலைவர்களுக்கு பேரினவாதம் இடம் கொடுக்கவில்லை. அதனை அழிப்பதாக பாரிய இனப்படுகொலை செய்து ஆயுத யுத்தம் முடிவுற்றதாக நீங்கள் கூறினாலும் தமிழர் பிரதேசத்தில் வேறு வடிவில் யுத்தம் முன்னெடுக்கப்பட்டு கொண்டு தான் இருக்கின்றது. இதனை நீங்களும் அறிவீர்கள்.

நீதிக்காக சர்வதேசத்தின் கதவுகளை தட்டிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு நீதிக்கு வழிவகுங்கள். அதற்கு உங்களைப் போன்றவர்களோடு சேர்ந்து குரல் கொடுங்கள். தமிழர்களுடனான உறவை பலப்படுத்துங்கள். அதுவே நாட்டுக்கும் அரசியல் எதிர்காலத்திற்கும் சுகம் கொடுக்கும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# நீதிகோரும் போராட்டத்தில் அனைவரும் அணிதிரள்வோம்

## சிறீதரன் எம்.பி அழைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெறும் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரும் போராட்டத்தில் அனைவரும் இணைவோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரது உறவுகளின் சங்கத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளது சங்கப் பணிமனைக்கு முன்பாக நீதிக்கான போராட்டமொன்று இடம்பெறவுள்ளது.

எனவே இந்த நீதிக்கான போராட்டத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (நி-5)



நாவாந்துறை தெற்கில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காகவும் வலுவூட்டுவதற்காகவும் Diakonia Asia ஆதரவுடன் 'வாகை' குழுவினரின் ஆரோக்கியமான வாழ்வு, ஆரோக்கியமான தேர்வுகள் திட்டத்தின் மூலம் புதிய பிரச்சினைகளை புதிய கண்ணோட்டத்தில் அணுகுவதற்கான தெரு நாடக ஆற்றுகை அண்மையில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்:-சிவசாந்தன்)

# இயற்கை துறைமுகமாக திருமலையை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் அரசு

(திருமலை)

நாட்டில் உள்ள ஒரே ஒரு இயற்கை துறைமுகமான திருகோணமலையை அபிவிருத்தி என்ற போர்வையில் இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ள பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்.

பல நாடுகளின் பார்வை திருகோணமலை துறைமுகத்தில் காணப்படுகிறது. ஆனால் நமது நாட்டின் பார்வையானது திருகோணமலை துறைமுகத்திலே இல்லாதது வேதனை அளிக்கிறது. கடந்த காலங்களில் இத்துறைமுகத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்திருக்கிறோம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இத் துறைமுகம் தென்பகுதியில் அமைந்திருந்தால் இதன் நிலை வேறு மாதிரி இருந்திருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இருக்கும் துறைமுகத்தை பயன்படுத்தி வருமானத்தை அதிகரிப்பதை விட்டுவிட்டு இல்லாத ஒன்றை உருவாக்கி கப்பல் வராத துறைமுகத்தை வெளிநாடுகளில் இருந்து பில்லியன் கணக்கில் கடன் வாங்கி இருப்பது வீணான செயலாகும். நம் நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

திருகோணமலை துறைமுகம் கட்டாயம் அபிவிருத்தி செய்ய வேண்டிய ஒன்றாகும். இதனைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். இதனை அபிவிருத்தி செய்தால் வடக்கு கிழக்கில் கைத்தொழில் வளர்ச்சியடையும். எனவே இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (நி-5)

PRINTING MACHINES
GOOD CONDITION
FOR QUICK SALE - IN COLOMBO

* MBO & STAHL FOLDING MACHINES SIZE 24"X36"
* SMALL FOLDING MACHINE - SIZE A3 Two folding
* GUMMING MACHINES- HARD COVER GLUE PASTING MACHINE - SIZE 25"
* DOUBLE HEAD STITCHING MACHINE IDEAL FOR FAST PRODUCTION
* SINGLE HEAD STITCHING MACHINE
* AUTO-SPIRALING MACHINES
* LARGE COMPRESSOR

(C-2191)

PLEASE CONTACT : 0772663725
A. CHANTHIRAPALAN



சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஆற்றல் கொண்டு மாற்றம் காண்போம் எனும் தொனிப்பொருளில் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு நேற்று புதுக்குடியிருப்பு [illegible] மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. [illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1400 | 1400 |
| தக்காளி | 700 | 700 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 150 |
| கோவா | 400 | 350 | 400 | 500 |
| கரட் | 350 | 480 | 450 | 500 |
| பூசணி | 140 | 120 | 120 | 120 |
| புடோல் | 300 | 300 | 250 | 350 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 340 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 260 | 300 | 350 |
| பாகற்காய் | 700 | 500 | 500 | 700 |
| வெண்டக்காய் | 300 | 250 | 240 | 350 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 600 | 650 | 450 | 450 |
| லீக்ஸ் | 300 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 250 | 800 | 800 | 600 |
| கறிமிளகாய் | 700 | 850 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 1000 | 1700 | 800 | 2000 |
| போஞ்சி | 500 | 650 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 500 | 550 |
| கீரை – 1 பிடி | 150 | 120 | 150 | 200 |
| தேசிக்காய் | 800 | 800 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 600 | 400 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | 200 | — | 320 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 35 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 140 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழுக்கான...

பராமரிப்பு பணிகள் காரணமாக இவ்வாறு ரயில் சேவைகள் தற்காலிக மாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு ரயில் பாதையில் திட்ட மிடப்பட்ட இரண்டாம் கட்ட பராமரிப்புப் பணிகள் மஹவ மற்றும் அநுராதபுரம் ரயில் நிலையங்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பராமரிப்பு பணிகள் 7 ஜனவரி 2024 முதல் மேற்கொள்ளப்படும் என வும் ஆறு மாதங்களுக்குள் இதனை முடிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் ரயில்வே திணைக்களம் கூறியுள்ளது.

எனவே, இந்தக் காலப்பகுதியில் கொழும்பு கோட்டையில் இருந்து மஹவ புகையிரத நிலையம் வரையி லும் காங்கேசன்துறையிலிருந்து அநு ராதபுரம் வரையிலும் மாத்திரம் ரயில் கள் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (ம-7)

## வற் வரி...

அலுவல்கள் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, குறித்த விவாதம் இன்று முற்பகல் 9.30 முதல் மாலை 4.30 வரை நடைபெறவுள்ளது. (ம-7)

## இலத்திரனியல்...

யலை இ-பில் (e-bill) மற்றும் குறுந் தகவல் (SMS) மூலமாகவோ, அல்லது மின்னஞ்சல் (e-mail) மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்காக REG (இடைவெளி) கணக்கு இலக்கம் என ரைப் (type) செய்து 1987 என்ற இலக்கத்திற்கு குறுந்தகவலை (SMS) அனுப்பி பதிவு செய்யலாம்.

மேலும் EBILL (இடைவெளி) கணக்கு இலக்கம் (இடைவெளி) உங் களுடைய மின்னஞ்சல் என ரைப் (type) செய்து 1987 என்ற இலக்கத் திற்கு குறுந்தகவல் (SMS) அனுப்பி பதிவு செய்யலாம்.

இதுமட்டுமல்லாமல் EBILL.ceb.lk என்ற இணையப் பக்கத்தின் ஊடாக வும் பதிவு செய்யலாம் என்றும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (ம-7)

## மின்சாரக்...

பாராளுமன்றில் நேற்று உரையாற் றும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் 13ஆம் திகதி மின்சார கட்டண திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படாது எனவும், குறித்த சட்டமூலம் ஜனவரி மாதத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரி வித்துள்ளார். (ம-7)

## கிணற்றிலிருந்து...

ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கைதடி தெற்குப் பகுதியைச் சேர்ந்த 41வயதான இளம் குடும்பஸ்தர் ஒரு வரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரி சோதனை மற்றும் மரண விசாரணை களுக்காக சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது. (ம-7,30)

## மின்சாரம்...

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள் ளார். (ம-7)

## ஐ.எம்.எப்புடன்...

தவணை கடனை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பின்போதே அமைச் சர் இதனை தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பிற்குப் பின்னர், நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விடும் என்பதை உலகிற்கு அறிவிக்க முடியும் எனவும் நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெ டுக்க அரசாங்கம் கட்டம் கட்டமாக நட வடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார வளர்ச் சிக்கு புதிய முதலீட்டாளர்கள் தேவை எனும் அடிப்படையில், அதற்கான வேலைத்திட்டத்தை தற்போது ஆரம் பித்துள்ளதாகவும் அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில், தற்போதுள்ள பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மேலும் மேம்படுத்த முடியும் என நம்புவதாகவும் அவர் தெரிவித் தார். (ம-7)

## பௌத்த...

தில் இடம்பெற்ற குழுநிலை விவாதத் தின் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

"பௌத்த சாசனத்தை காக்க வேண்டுமெனில் நாட்டில் ஒற்றை யாட்சி பாதுகாக்கப்பட வேண்டும்.

ஏனெனில் தற்போது வடக்கு, கிழக் கில் பௌத்த தொல்பொருட்கள், புரா தன சின்னங்கள் வேகமாக அழிக்கப் படுகின்றன.

குருந்தூர்மலை விவகாரம் இதற்கு சிறந்த சான்று, நெடுங்கேணியில் இருந்த பௌத்த சின்னம் அகற் றப்பட்டு வேறொரு சிலை அங்கு வைக்கப்பட்டதை நான் கண்டேன்.

இந்நிலைமை யில் வடக்கு, கிழக்கு பிரிந் தாலோ, தனி நாடு உருவாகி னாலோ என்ன நடக்கும்? எனவே ஒற்றை யாட்சியை பாது காக்க வேண்டி யது மிக முக்கி யம்" எனத் தெரி வித்தார். (ம-7)

## நாடு...

கொத்மலையில் இருந்து பியகம வரையான மின் விநியோக பாதை யில் ஏற்பட்ட கோளாறு காரண மாக நாடு முழுவ தும் மின் விநி யோகம் துண்டிக் கப்பட்டதாக மின் சார சபை தெரி வித்துள்ளது.

இலங்கையில் பல மின்மாற்றி கள் மற்றும் மின் நிலையங்களில் ஏற்பட்ட மின்னல் தாக்கம் காரண மாக நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில், நாடு முழுவதும்ஏற் பட்ட பரவலான மின்வெட்டு காரண மாக இணைய இணைப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப் படுகிறது.

மேலும், துண் டிக்கப்பட்டுள்ள மின் விநியோ கத்தை சீரமை க்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சார சபை யின் ஊடகப் பேச் சாளர் பொறியிய [illegible] தெரிவித் தார். (ம-7)

## தங்கப் பொதியுடன் இருவர் கைது

புத்தளம் - பத்தலங்குண்டு தீவுக்கு அருகில் நான்கு கிலோகிராமுக்கும் அதி களவான தங்கம் அடங்கிய பொதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட் டுள்ளதாக கடற்படையினர் தெரிவித் துள்ளனர்.

குறித்த பகுதியில் இலங்கை கடற் படையினர் முன்னெடுத்த தேடுதல் நட வடிக் கையின்போது தங்கம் அடங்கிய பொதி மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-7)


கட்டுமான வேலைகள்

சட்டறிங் வேலைகள், கட்டுமான வேலைகள் மற்றும் உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை நேரில் வந்து பிரச்சினைகளை ஆராய்ந்து நிவர்த்தி செய்து தருகிறோம்.

தொடர்புகளுக்கு: 077991 9992/ 0775719803

(C-7856)



லக்கி 7 VIP
திகதி 2023.12.09
சீட்டிழுப்பு இலக்கம் 0149
X 4 3 4 4 5 4 X

தன நிதானய
திகதி -2023.12.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1353
P 33 40 44 80 P
29456

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3565
சீட்டிழுப்பு திகதி 09.12.2023
N 30 33 37 74
N 14730

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.09
சீட்டிழுப்பு இலக்கம் 0632
இடபம் 10 22 25 39 இடபம்
54495 29

மஹஜன சம்பத
திகதி 2023/12/09
சீட்டிழுப்பு இலக்கம் 5323
T 9 9 7 2 4 7

மெகா பவர்
திகதி 09/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1671
W 24 17 26 32 34
73701

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
திகதி 2023.12.09 வெற்றி வாரம் 0031
T 8 1 9 3 5 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,454,523.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 02 16 21 35 69
1473
2023.12.09
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 475,320,944.20
DLB
தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
திகதி 2023.12.09 வெற்றி வாரம் 4458 வர்ணம் இளம் பச்சை
08 13 18 21 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,333,104.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4009 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.09 தினம் சனிக்கிழமை
40 42 54 59 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,568,328/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2297 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.09 தினம் சனிக்கிழமை
27 61 65 71 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,547,020/-

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2123
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,901,568/-
சீட்டிழுப்பு திகதி: 2023 12 09
50 53 57 66 B
A. CHANTHIRAPALAN


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**IELTS** - New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18097)

**வரலாறு** குழு வகுப்புகள்
தரம் 9, 10, 11 I.KAJAN
தரம் 6, 7, 8 M.PARTHEEPAN
NEWTON
077 792 3653

**இரத்ததான முகாம்**
(யாழ்ப்பாணம்) கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மாபெரும் இரத்த தான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள குட்டிச் சுட்டி முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது. (ம-7)

**கிளிநொச்சி அறிவியல் நகரில் வீடு வாடகைக்கு விடப்படும்**
யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி பொறியியல் பீடத்திற்கு அண்மையில் 400 மீற்றர் தூரத்தில் இரு அறைகளுடனும் இரு குளியலறைகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.
(அதில் ஒரு அறை குளியலறையுடன் இணைந்த நிலையில் உள்ளது.) (18108)
077 936 1568

**ENGLISH**
Grade 6 (2024)
Sat 9-10am Sun 9-10am
P.Tharmakumaran(P.MATHAN)
B.A(Eng.Lit), Dip.in.Eng.,SLTES
NEWTON
NALLUR 077 792 3653

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7858)
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது ≥30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

**காணி விற்பனைக்கு**
மீசாலை மேற்கு டச்சு வீதியில் நிலப்பரப்பு - நான்கு
- மீசாலை புகையிரத நிலையம் A9 வீதி என்பவற்றில் இருந்து 150 மீற்றர்
- நான்கு பக்கமும் சுற்று மதில்
- நல்ல தண்ணி குழாய் கிணறு.
- மின்சார இணைப்புள்ளது.
- குளியலறை, மோட்டர் பம் நீர்த் தாங்கி அனைத்தும் உள்ளது.

தொடர்புகளுக்கு (18127)
077 081 4874

**பாவித்த DAMRO தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு...**
1.Dressing table(கண்ணாடி மேசை)=02sets
2.wardrobe (அலுமாரி) = 02 pieces
3.Queen size bed + Mattress கட்டிலும் மெத்தையும் } 02 Set
4.Sofa(3 pieces)=01 set
தொடர்புகளுக்கு : (18145)
077 716 6028

**CANADA**
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7858)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

**காணி விற்பனைக்கு**
கீரிமலை மாதகல் வீதியில் கடற்கரை காணி 32 பரப்பு விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு (18144)
077 147 6526

**காணியுடன் வீடு விற்பனைக்கு**
இராச வீதி கோப்பாய் பொலிஸ் ஸ்ரேசனடியில் உள்ள 4 1/4 பரப்பு காணியும் புதிதாக கட்டப்பட்ட வீடும் விற்பனைக்குண்டு.
வீடு தனியாகவும் வழங்கப்படும்.
காணியும் பிரித்து கொடுக்கப்படும். (18148)
074 125 1188

**காணி விற்பனைக்கு**
நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை (18131)
தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389, 077 986 5457


**31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு**



பிறப்பு 19 . 11 . 1953
இறப்பு 11 . 11 . 2023

**அமரர் தில்லைநடராசா செல்வராசா (ராசு அண்ணா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.12.2023) திங்கட்கிழமை அதிகாலை அவரது இல்லத்தில் நடைபெற்று ஊறணி புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அந்நிகழ்விலும் தொடர்ந்து மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்
(18126)


**Happy Supermarket** - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 296/= (Max 2Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg கோதுமை மா | - 183/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 300/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= |
| 1 Kg அரிசி மா | - 194/= |
| 400g அங்கர் பால்மா | - 1025/= (1080/=) |
| 750ml New V.S.P நல்லெண்ணை | - 1300/= (1400/=) |
| 70g Baby Soab | - 112/= (145/=) |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435/= (3900/=) |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 262/= (330/=) |
| 180ml Chik Shampoo | - 370/= (480/=) |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= (330/=) |

3435/=

3900/=
(18178)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.